விழி உங்களிடம்
அதன்
ஒளி எங்களிடம்
எரிக் கணேஷ்
[மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்]
566, கேணல் கிட்டு சாலை, (ஆஸ்பத்திரி வீதி), யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மூக்குக் கண்ணாடி
அழகிய பிறேம்
சிறந்த முறையில்
தெரிவு செய்து
அதே நாளில்
பெற்றுக்கொள்ள
எரிக் கணேஷ்
[மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்]
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 16 செவ்வாய்க்கிழமை (30 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 184

# ராணுவ உபகரணங்கள், வாகனங்கள்
# ஸ்ரீலங்காவுக்கு அமெரிக்கா வழங்கும்!

## ஆயுதங்கள் வழங்கப்படமாட்டா

கொழும்பு, மே 30

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு ஆயுதம் அல்லாத இராணுவ உபகரணங்களையும் மற்றும் வாகனங்களையும் வழங்க அமெரிக்கா முடிவு செய்திருப்பதாக அரசசார்புப் பத்திரிகையான "டெய்லிநியூஸ்" நேற்றுச் செய்தி வெளியிட்டது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க இராணுவ உதவிகளை அமெரிக்காவிடம் இலங்கை அரசு கோரியிருந்ததாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் தெற்காசியப் பிரிவின் அதிகாரியான றொபின் ரபீல்ட் தெரிவித்திருப்பதாக வாஷிங்டன் அறிக்கையை ஆதாரம் காட்டி 'டெய்லி நியூஸ்' மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

இதே வேளை —

விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகத் தொடர்பாளரான லோறன்ஸ் திலகரை, அமெரிக்க வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இம்மாத ஆரம்பத்தில் சந்தித்துப் பேசியபோது — சமாதானப் பேச்சை மீண்டும் தொடங்குமாறு அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தியதாகவும்றொபின் ரபீல்ட் கூறியதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேசமயம் விடுதலைப் புலிகளுக்கும், அரச படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை நிலாவெளியில் புலிகளின் நீர்மூழ்கி?

### படையினர் கண்டனராம்

கொழும்பு, மே 30

விடுதலைப் புலிகளின் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று திருகோணமலை நிலாவெளி கடற்பகுதியில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர் அவதானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அப்பகுதியில் புதுவிதமான கப்பல் ஒன்றை கடற்படையினர் அவதானித்ததாகவும் —

அதனை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது அது கடலுக்குள் அமிழ்ந்து விட்டு, சுமார் ஐம்பது மீற்றர் சென்ற பின்னர் மீண்டும் நீர்மட்டத்துக்கு மேல் காணப்பட்டதாகவும் —

இது புலிகளின் சிறிய அளவிலான நீர்மூழ்கிக் கப்பலாக இருக்கலாம் எனவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகப்படுவதாக "திவயின" சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (உ-6)

## அனுரா மீண்டும் சு.கவில் சேருவார்!

கொழும்பு, மே. 30

அனுரா பண்டாரநாயக்கா மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேரவுள்ளார் என "யுக்திய" பத்திரிகை தெரிவிக்கிறது.

இது தொடர்பான நடவடிக்கைகள் சுதந்திரக் கட்சிக்குள்ளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவாம்.

ஒரு சில காலத்திற்கு அமைதியைப் பேணுமாறு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோர் அனுரா பண்டாரநாயக்காவைக் கேட்டுள்ளதாகவும்—

பொது மக்கள் ஐக்கிய முன்னணியைப் பற்றியோ சுதந்திரக் கட்சியைப் பற்றியோ அனுரா முன்னர்போல இப்போது கருத்துகள் எதனையும் கூறாமல் மௌனமாக இருப்பதற்கு இதுவே காரணம் எனத் தெரியவருவதாகவும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

தாயார் சிறிமாவின் விருப்பத்திற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்—

இதற்கு முன்னரும் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும்—

ஆனால் அப்போது அனுரா அதில் அதிக அக்கறை

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## சிங்கள பெண்களுக்கும் துப்பாக்கி

யாழ்ப்பாணம், மே 30

பொலன்னறுவை —மட்டக்களப்பு எல்லைக்கிராமங்களில் சிங்களக் குடும்பப் பெண்களுக்கும் ஸ்ரீலங்கா அரசு துப்பாக்கிகளை வழங்கியுள்ளது.

கிராமங்களின் எல்லைப் புறங்களில் இப்பெண்கள் துப்பாக்கிகளுடன் காவல் கடமையில் ஈடுபடுகிறார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## குடாநாட்டைத் தாக்கும் திட்டத்துக்கு களத்தில் உள்ள அதிகாரிகள் எதிர்ப்பு!

### சிற்றமுற்ற ரத்வத்தை தளபதிகளை மாற்றினார்

யாழ். குடாநாட்டின் மீது இராணுவ நடவடிக்கை எடுத்து, விடுதலைப்புலிகளை அடக்கும் திட்டம் தொடர்பாக இராணுவ உயர்பீடத்துக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் பெருத்த கருத்து வேறுபாடு ஏற்பட்டதாகவும்—

அதனையடுத்தே ஸ்ரீலங்கா இராணுவ கட்டளைப் பீடத்தில் பெரிய மாற்றங்களை— அதிரடி நடவடிக்கையாக— அரசு மேற்கொண்டது என்றும்—

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குடாநாட்டைப் பிடிக்கும் உத்தேச திட்டம் குறித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தைக்கும் இராணுவ உயரதிகாரிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் இடம்பெற்றதாகவும் அறியவருகின்றது.

கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரத்வத்தை தலைமையில் பாதுகாப்பு உயரதிகாரிகளின் உயர் நிலைக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா, இராணுவ பணிப்பாளர்நாயகம் மேஜர் ஜெனரல் பற்றிக் பெர்னாண்டோ, கூட்டுப் படைநடவடிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் அதிபர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கொழும்பு, மே 30

ரயில் நிலைய அதிபர்கள் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த ரயில் சேவைகள் இன்று முதல் வழமை நிலையை அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(முன் வந்த செய்தி 5 ஆம் பக்கம்) (இ)

## தேர்தலில் ஊழல் புரிய விசேடமாக படை அதிகாரிகளை டி.பி. நியமித்தார்?

### அவரை விசாரணை செய்ய முடியாத நிலையில் சி.ஐ.டி

கொழும்பு, மே 30

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சிரேஷ்ட இராணுவ பொலிஸ் அதிகாரிகளுக்கு தேர்தலுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி டி.பி விஜேதுங்க விசேட நியமனங்கள் வழங்கியமை குறித்து முன்னாள் ஜனாதிபதியை தாங்கள் விசாரணை செய்ய முடியாத நிலையில் இருப்பதாக இரகசியப் பொலிஸ் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கான விசேட விதிவிலக்கு பாதுகாப்பு டி.பி. விஜேதுங்காவுக்கு இருப்பதால் அவரை விசாரணைக்கு உட்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக சி.ஐ.டி. யினர் தெரிவித்தனர்.

தேர்தலுக்கு முன்னர் அப்போதைய ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவினால் -தற்துணிபின் பேரில் — விசேட நியமனம் பெற்ற பல இராணுவ பொலிஸ் அதிகாரிகளே தேர்தல் துஷ்பிரயோக நடவடிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தை இரு வாரங்களில் பிடிப்பதே அனுருத்தவின் திட்டமாம்!

கொழும்பு, மே 30

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு இரண்டு வாரம் கால அவகாசம் வழங்கி, பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தை சமர்ப்பித்த திட்டத்தையே இராணுவ உயரதிகாரிகளான மேஜர் ஜெனரல்கள் செனிவிரத்னவும் கெமுனுகுலதுங்கவும் கடுமையாக எதிர்த்தனர் என "ராவய" சிங்கள வாரஇதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஆறாயிரம் படை வீரர்களை மட்டும் வைத்துக் கொண்டு — குறுகிய காலத்தில் குடாநாட்டைக் கைப்பற்ற முயற்சிப்பது இராணுவத்துக்கு பாரிய இழப்புகளையே ஏற்படுத்தும் என்று அந்த மேஜர் ஜெனரல்கள் வலியுறுத்தினராம்.

தலா ஆறாயிரம் துருப்புக்களைக் கொண்ட இந்தியப் படையின் ஆறு பிரிகேட்டுகளினால் (மொத்தம் 36 ஆயிரம் துருப்புகள்) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை— தலா சுமார் ஆயிரத்துஇருநூறு துருப்புகளைக் கொண்ட ஆறு பட்டாலியன்களைக் (மொத்தம் ஏழாயிரத்து இருநூறு துருப்புக்களைக்) கொண்டு மேற்கொள்வது எப்படி என இந்த மேஜர்கள் கேள்வி எழுப்பினராம் என "ராவய" மேலும் தெரிவித்தது. (உ-10)

## கல்வி மேம்பாட்டு நிதியத்துக்கான கொடி ஏழல்

யாழ்ப்பாணம், மே 30

தமிழீழ கல்வி மேம்பாட்டு நிதியத்துக்கான கொடி ஏழல (வாரம்) இன்று 30 ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பல வகையான கல்வி அபிவிருத்தி சம்பந்தமான வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி சேர்க்கும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். ஆஸ்பத்திரி மின் விநியோகம் மீண்டும் ஸ்தம்பிக்கும் ஆபத்து நிலை!

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மின்சார விநியோகம் ஸ்தம்பிதம் அடையும் ஆபத்து உருவாகியுள்ளது.

இத்தகைய ஆபத்தைத் தடுக்கும் முறையில் இப்போது சுழற்சி முறையிலேயே மின்சார விநியோகம் நடைபெறுகிறது.

சத்திர சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, அதி தீவிர சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்றே பிரிவு தவிர்ந்த ஏனைய சகல பகுதிகளுக்கும் சுழற்சி முறையிலேயே மின் விநியோகம் வழங்கப்படுகிறது.

நீர்த் தாங்கிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலமே தண்ணீர் நிரப்பப்படுகிறது.

ஆஸ்பத்திரி மின் வியோகத்திற்குத் தேவையான இம்மாதத்துக்கான டீசல் இன்னும் இங்கு வந்து சேராததாலேயே இந்த நிலை உருவாகியுள்ளது.

கோட்டா முறையில் யாழ். ஆஸ்பத்திரிக்கு மாதாந்தம் 60 பரல் டீசல் கொழும்பிலிருந்து அனுப்பப்படுவது வழக்கம்.

மே மாதத்தில் கிடைக்க வேண்டிய டீசல் கப்பல் போக்குவரத்து வசதி இன்மையால் இன்னும் வந்து சேரவில்லை.

இன்று வரும் "மாஹோ" மற்றும் "கல்யாணி" ஆகிய கப்பல்களிலும் டீசல் எடுத்து வரப்படமாட்டாது என அறியவந்துள்ளது.

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## வீதியால் சென்றவர் துப்பாக்கி வேட்டுக்கு பலி

### வெள்ளவத்தையில் சம்பவம்

கொழும்பு மே 30

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தவர்களில் ஒருவர் அதே இடத்தில் கொல்லப்பட்டார்.

மற்றவர் காயங்களுடன் களுபோவில ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் வெள்ளவத்தை ஹம்டன் லேனில் இச் சம்பவம் இடம் பெற்றது. (இ-5)

## பின்னடைவுகளையும் அழிவுகளையும் இராணுவத்தால் தவிர்க்க முடியாது

யாழ்ப்பாணம், மே 30

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் தன்னைப் பலப்படுத்துவதற்கு கவனம் செலுத்தினால் என்ன,

— வடக்கு மாகாணத்தில் இராணுவத்தை விடுதலைப் புலிகள் மேலும் பலவீனப் படுத்துவதை தடுக்க முற்பட்டால் என்ன

— பின்னடைவுகளையும், அழிவுகளையும் ஸ்ரீலங்கா இராணுவத்தால் தவிர்க்க முடியாது.

"ஐலண்ட்" பத்திரிகையின் விமர்சகர் தராக்கி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமது இறுதி இலக்கை அடையக்கூடிய வகையில் வடக்கிலும், கிழக்கிலும் முன்னேற்றமுள்ள மூல உபாயங்களை விடுதலைப் புலிகளால் வகுக்க முடிந்துள்ளது.

இரண்டாம் கட்ட ஈழப் போரின் போது விடுதலைப் புலிகள் தமது இராணுவ பலத்தை பெருமளவில் பயன்படுத்தி பின்னடைவான பாதுகாப்பு நிலைமைக்கு ஸ்ரீலங்கா படையினரை இட்டுச் சென்றுள்ளார்கள்.

வடக்கில் இராணுவ மூலோபாயம் ஒன்றை வகுக்கக்கூடிய அத்தனை வழிவகைகளும் ஸ்ரீலங்கா அரசுக்கு அடைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஸ்ரீலங்கா அரசு வடக்கு மாகாணத்துக்கா அல்லது கிழக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. ஆட்சியில் பதவி இழந்த
## 5 ராணுவ அதிகாரிகளுக்கு மேஜர் ஜெனரல் பதவி

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் பழிவாங்கலுக்கு உள்ளாகி தமது பதவியைத் துறந்த ஐந்து இராணுவ அதிகாரிகளை மேஜர் ஜெனரலாக நியமிப்பது என அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த புதனன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டதாக "ராவய" பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

லெப்டினன்ட் கேணல்கள் எம்.டி. பெர்னாண்டோ, பிரசந்த தஹநாயக்கா, எச். வீரசிங்க, மேஜர்கள் வி.டி. லங்காதிலக, ஏ.ஆர்.டி. விஜேரத்தின ஆகியோரே பதவி நிலை உயர்வு பெற விருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## மருத்துவ பீட விரிவுரைகள் நேற்று சுமுக ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ். மருத்துவ பீட விரிவுரைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

வட - இலங்கை தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 37 பேரை யாழ். மருத்துவ பீடத்துடன் இணைக்கும் விவகாரத்தை கண்டித்து—

மருத்துவ பீடக் கட்டடத்தை மூடியும், பின்னர் உண்ணாவிரதம் மேற்கொண்டும் மருத்துவ பீட மாணவர்கள் நடத்திய போராட்டம் காரணமாக—

இம்மாதம் 5 ஆம் திகதியிலிருந்து விரிவுரைகள் நடைபெறவில்லை.

மருத்துவ பீட மாணவர்கள் துணைவேந்தரிடம் மன்னிப்புக் கேட்டதைத் தொடர்ந்து—

மருத்துவ பீட விரிவுரையாளர்கள் கடந்த சனிக்கிழமை கூடி விரிவுரைகளை நடத்த முடிவு செய்தது தெரிந்ததே.

அதனைத் தொடர்ந்து நேற்று விரிவுரைகள் வழமை போல சுமுகமாக நடைபெற்றன. (அ-4-3)

## வடக்குக்கான தபால்கள் மீண்டும் கிழித்துச் சோதனை செய்யப்படும்

வடபகுதிக்கான வெளியூர்த் தபால்கள் முன்னரைப் போல கொழும்பில் படையினரால் கிழித்துச் சோதனை செய்யப்பட்ட பின்னரே இங்கு அனுப்பப்பட உள்ளன.

வட பகுதிக்கான 373 தபால் பொதிகள் இப்போது கொழும்பில் தேங்கிக் கிடக்கின்றன.

இப்பொதிகளை [illegible] ஏற்றுவதற்குத் தபால் பகுதியினர் முயற்சி செய்த போதிலும் வெற்றி கிடைக்கவில்லை.

தபால் பொதிகள் மொத்தம் நான்கு தடவைகள் ஏற்றப்பட்டு, பின்னர் படையினரால் [illegible] இறக்கப்பட்டதாகத் தகவல்கள் [illegible].

தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சின் பிரதி இணைப்புச் செயலாளரும், அத்தியாவசிய சேவைகள் நாயகமும் தபால் பொதிகளை அனுப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் பாதுகாப்பு அமைச்சு அதற்கு அனுமதி வழங்கவில்லை என்று அறியவந்துள்ளது.

## செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய பிரதிநிதி வருகை

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாக திரு. ஜோர்ஜ் தன்ஸ் நியமனம் பெற்றுள்ளார்.

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் "சிடான்ஸர்" கப்பலில் இவர் யாழ். வருவார்.

தற்சமயம் யாழ். வதிவிடப் பிரதிநிதியாகப் பணியாற்றும் மேரிபேர்கின்ஸ் ருவாண்டாவில் உள்ள அலுவலகத்துக்கு மாற்றம் பெற்றுச் செல்வதையடுத்தே இவர் நியமனம் பெற்றுள்ளார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுசில் முனசிங்கா பேட்டி

# வெளிநாட்டுத் தலையீட்டைக் கோருவது கோட்பாடற்ற செயலாக அமையும்

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒத்துழைக்காவிட்டால் வடக்கு- கிழக்கு நெருக்கடிக்கான தீர்வு தூரக்கனவாகவே இருக்கும்.

ஐக்கியதேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரும் மேற்கு மாகாண முன்னாள் முதல் அமைச்சருமான சுசில் முனசிங்க மே21 ஆம் திகதிய "சண்டே ஐலண்டுக்கு" அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

பேட்டி வருமாறு:

★ கேள்வி: விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நடத்திய பேச்சுவார்த்தையை நீங்கள் விமர்சித்திர்கள். இப்பொழுது விடுதலைப் புலிகள் மோதலை மீண்டும் தொடங்கி உள்ளார்கள். அரசாங்கம் விடுதலைப் புலிகளின் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாமல் இருக்கிறது. இன்றைய நிலைமை பற்றி உங்களுடைய அவதானிப்புகள் யாவை?

★ பதில்: இந்த நாட்டில் உள்ள அனைவரும் சமாதானத்தை விரும்புகிறார்கள் என நான் கருதுகின்றேன். சமாதானத்தை நாடும் பொழுது அல்லது விரும்பும் பொழுது இரண்டு விஷயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டும். பலத்தின் அடிப்படையில் சமாதானத்தை நாடுகின்றீர்களா? அல்லது பலவீனத்தின் அடிப்படையில் சமாதானத்தை நாடுகின்றீர்களா? தற்பொழுது விடுதலைப்புலிகள் சமாதானத்தை நாடவில்லை. நாங்கள்தான் அவர்களுடன் சமாதானம் பேச முன்வந்துள்ளோம். நாம் சமாதானம் பேசும்போது அது சமாதானத்துக்கான சமாதானம் அல்ல; அது அரசியல் தீர்வு ஒன்றைக்காண்பதற்கான வழிமுறையாகும். விவேகமற்ற, அனுபவமற்ற இந்த அரசாங்கம் திரும்பிப் பார்த்து கடந்த காலத்திலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஜனாதிபதி பிரேமதாசாவும் ஜனநாயகத்தை விரும்பி பேச்சுவார்த்தை நடத்தினார். விடுதலைப்புலிகளுக்கு சில விஷயங்களைக் கொடுக்க அவர் உடன்பட்டார். அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். அவர் இவற்றை எல்லாம் செய்தார் என்ற போதும் ஒரு தவற்றை இழைத்தார். அரசியல் தீர்வு ஒன்றை அவர் முன் வைக்கவில்லை.

மாகாண சபைகள் மூலம் தானாகவே தீர்வுகாண்பது தான் அவர் மனதில் கொண்டிருந்த தீர்வாகும். ஆனால் அதிலும் ஒரு முரண்பாடு இருந்தது. கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை குழப்பி அடிக்கப்பட்டது வரதராஜப் பெருமாளுக்கு எதிராக உண்மையில் சீர்குலைவு வேலை நடைபெற்றது. இப்படிச் செய்து விடுதலைப்புலிகளைத் திருப்திப்படுத்தி அவர்களைப் புதிய சிந்தனை நிலைமை ஒன்றுக்கு கொண்டுவர ஜனாதிபதி பிரேமதாச விரும்பினார். ஆனால் நாம் கசப்பான படிப்பினையையே பெற்றுக் கொண்டோம். கிழக்கு மாகாணத்தில் முழுக்கட்டுப்பாட்டையும் இழந்தோம்.

*தீர்வைப்பற்றி முடிவு வேண்டும்*

சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தப் போகிறோம் என்று இந்த அரசாங்கம் கூறிய போது, அவர்கள் முதலில் உட்கார்ந்து தாம் முன்வைக்கவிருக்கும் தீர்வைப் பற்றி முடிவெடுத்திருக்க வேண்டும் — விடுதலைப் புலிகள் இந்தத் தீர்வுவைக் கட்டாயம் கேட்டார்கள் என்றில்லை அரசாங்கம் வழங்க இருக்கும். தீர்வு என்ன என்று விடுதலைப்புலிகள் கேட்கின்றார்கள். நாம் என்ன கூறுவது?

இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை சமூகம் அதாவது சிங்கள சமூகம்— பிளவுபட்டிருக்கிறது. நான் இதைக் கூறும்போது என்னை ஒரு இனவாதி என்று சிலர் கூறலாம். ஆனால் நான் ஒருபோதும் இனவாதிஅல்ல. ஸ்ரீலங்காஒரு நாடாக இருக்க வேண்டும். ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டும் என்று நான் நம்புகிறேன், ஆனால் இன அம்சம் என்ற விஷயம் தவிர்க்க முடியாதது. பயங்கரவாதம் என்பது இதன் வெளிப்பாடாக இருக்கலாம்.

என்னுடைய கருத்தில் பயங்கரவாதம் என்பது இன அதிருப்தியிலிருந்து தோன்றிய கிளையாகும். தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்த வரையில் அவர்களில் பெரும்பான்மையினர் தெளிவாகத் தமக்குச் சுயாட்சி வேண்டும் என்று நிற்கிறார்கள். ஈழமோ சமஷ்டியோ சமஷ்டிக்குக் கூடுதலான ஒன்றோ, அது எதுவாக இருந்தாலும் அவர்களுக்குத் தேவை சுயாட்சி; தாம் விட்டுக்கொடுக்கக் கூடிய அளவிற்கு சுயாட்சிநாம் இதை ஏற்றுக்கொள்கிறோமா, ஏற்றுக் கொள்ளவில்லையா? நாம் முதலில் ஐக்கியப்பட்டிருக்க வேண்டும்.

பெரும்பான்மையின் விருப்பம் என்பதே ஜனநாயகத்தின் கோட்பாடு ஆகும். ஆனால் அதே வேளையில் ஒரு கடமை உணர்வைப் பெரும்பான்மைக்கு அது விதிக்கிறது. சிறுபான்மையைப் பொறுத்து அவர்கள் இந்தக் கடமையை நியாயமாகச் செய்ய வேண்டும். ஆனால் அரசியல் பிரிவுகள் காரணமாக சிங்கள சமூகம் உடன்பட முடியாமல் இருக்கிறது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிங்கள சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. நாம் என்ன செய்துள்ளோம்? பெரும்பான்மையிலிருந்து சிறுபான்மையாக எம்மை மாற்றிக் கொண்டுள்ளோம். இதனால் ஒரு தேர்தலில் ஐ.தே.க வெல்ல வேண்டும் என்றால் சிறுபான்மையினரை தங்கியிருக்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அப்படியே. ஒரளவிற்கு இது சரி. ஆனால் இன்று நாம் எதிர்நோக்கும் நிலைமையில் அல்ல. அன்ரன் பாலசிங்கம் பேச்சுக்கு வருமாறு கூறியதாக நான் எங்கோ வாசித்தேன்; "பெரும்பான்மை சமூகத்துடன் நாம் ஒரு தீர்வைக் காண வேண்டும். ஆனால் எந்தப் பிரிவுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்துவது?"

*இரண்டு கட்சிகளின் முரண்பாடு*

இந்த நிலைமையைக் கையாள ஐ.தே.க அரசாங்கம் மாகாணசபை அமைப்பை அறிமுகம் செய்த போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதை ஆட்சேபித்தது. ஆனால் பின்னர் அது மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிடத் தீர்மானித்தது. நிரந்தரமானதோர் தீர்வு ஏற்பட வேண்டும் என்றால் முழுப் பெரும்பான்மை சமூகமும் உடன்பட வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

ஒரு தீர்வுவழியைக் காண அரசாங்கம் ஐ. தே. கவுடன் ஒன்றாக அமர வேண்டும். ஐ.தே.க மொத்த வாக்குகளில் 42 சதவீதத்தைப் பெற்றுள்ளது. மறுபுறத்தில், அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மிகவும் அப்பாவித்தனமாக நடத்தியது. அது அரசியல் அனுபவம் அற்ற ஜனாதிபதியின் செயலாளரான பாலபட்டபெண்டியின் தலைமையிலான பிரதிநிதிக் கோஷ்டியில் ஒரு கட்டடக்கலை நிபுணரையும் கணக்காளரையும் அனுப்பியது; இது மிகவும் உக்கிரமான பேரம் பேச்சுக்கு உரிய விஷயம். விடுதலைப் புலிகள் பேச்சுகளுக்கு தமது சிறந்த ஆட்களை அனுப்பினார்கள். அரசாங்கம் அதன் விவேகம் இன்மையாலும் அனுபவம் இன்மையாலும் தவறு ஒன்றை இழைத்தது.

## ஐ. தே. கவும் சுதந்திரக் கட்சியும் ஒத்துழைத்தால் மட்டுமே தீர்வு சாத்தியம்

★ கேள்வி: இந்த நெருக்கடிக்குத் தீர்வாக நீங்கள் என்ன ஆலோசனை கூறுகின்றீர்கள்?

★ பதில்: என்னுடைய கருத்தின்படி, மாகாணசபை முறைக்கு செயற்பட சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அவை உண்மையில் அதிகாரப்பரவலாக்கம் மூலம் ஆட்சியை நடத்தும் ஒரு முறையாகும். இதில் மத்தியின் அதிகாரம் சுற்றுப்புறத்துக்கு வழங்கப்படுகிறது. ஆனால் அது நடைபெறவில்லை. மத்தி அதிகாரத்தை ஒருபோதும் கைவிட விரும்பாததால் மத்திக்கும் சுற்றுப்புறத்துக்கும் இடையில் எப்பொழுதும் ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை முதல் அமைச்சராக இருந்த நான் கூறமுடியும். 13ஆவது திருத்தத்தின் ஒரே நேர அட்டவணையின் மூலம் மத்தி அநேக அதிகாரங்களை மறைமுகமாகக் கொண்டிருக்கிறது. "இந்த ஒரே நேர அட்டவணையை இல்லாது செய்ய வேண்டும். இதைச் செய்யாவிடின் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்படும்" என்று காலஞ்சென்ற திரு அமிர்தலிங்கம் என்னிடம் கூறியது நினைவுக்கு வருகிறது அவருடைய வார்த்தைகள் தீர்க்கதரிசனமானவை.

★ கேள்வி: சிங்களவாதி போல் நீங்கள் சில வேளைகளில் பேசுவதாக உங்களைச் சிலர் விமர்சிக்கிறார்களே...

★ பதில்: நான் சிங்கள மக்களுக்காகப் பேசுகின்றேன். தமிழ் மக்கள், தமிழ் மக்களுக்காகப் பேசும் உரிமை உடையவர்கள். அவர்கள் அதைச் செய்கிறார்கள். முஸ்லிம் மக்கள் தமது சமூகத்துக்காகப் பேசும் உரிமை உடையவர்கள். அவர்கள் அதைச் செய்கிறார்கள். ஆனால் நாம் என்ன செய்கிறோம்? ஒருவருடன் ஒருவர் சண்டையிடுகின்றோம். நான் முன்னர் கூறியது போல், எம்மைப் பெரும்பான்மையினரிலிருந்து சிறுபான்மையினர் ஆக்கியுள்ளோம். தேசியக் கொடிக்கு இரண்டு கோடுகள் சேர்க்கப்பட்ட போது எமது பிரச்சினை ஆரம்பித்ததாக நான் கருதுகின்றேன். இந்த இரண்டு கோடுகளும் சமூகங்களுக்கிடையே பிளவை ஏற்படுத்தின. நாம் அனைவரும் ஸ்ரீலங்கர்கள். நாம் இனப் பிரதிநிதித்துவத்தை அனுமதித்தோம். தமிழ்க் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் முதலியன தமது சமூகங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்தக் கட்சிகள் தமது சமூகங்களைப் பாதுகாக்கும் விருப்பத்துடன் ஆரம்பிக்கின்றன. ஆனால் சிலவேளை அவை பெரும் அளவிற்குச் சென்று புடைத்து வீங்கி விடுகின்றன.

*வகுப்புவாதத்தை எதிர்ப்போம்*

இந்தியாவில் இன்று நடப்பதை நாம் பார்க்கலாம். கடந்த 48 ஆண்டுகளாக இந்தியா ஒரு [illegible] நாடாக இருந்து வருகிறது. ஆனால் பார[illegible] கட்சியைப் பாருங்கள். அது பகிரங்கமாக மதசார்புடைய கட்சி. இந்துக்களுக்காக ஒரு சிறிய இயக்கமாக ஆரம்பித்த இக்கட்சி இப்பொழுது மதசார்புக் கட்சியாகியுள்ளது. ஆகவே நாம் வகுப்புவாதிகளாக இருக்கக் கூடாது. இதனால்தான் விடுதலைப் புலிகள் போன்ற வகுப்புவாத சக்திகளை எதிர்த்துப்போரிட நாம் அனைவரும் ஒன்றுபட வேண்டும். அதேவேளையில் மற்ற சமூகங்களைப் பாதிக்காமல் தனது சமூகத்துக்காகப் பேசும் உரிமை இந்த நாட்டில் உள்ள அனைவருக்கும் இருக்க வேண்டும். சிங்கள சமூகத்துக்காக நான் பேசுகின்றேன் என்னும்போது இதைத்தான் நான் கருத்தில் கொண்டிருக்கிறேன். நான் ஒருபோதும் இனவாதியாக இருக்கமாட்டேன்.

★ கேள்வி: விடுதலைப் புலிகள் உருவாகியதற்கான பொறுப்பை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐ.தே.க. இரண்டும் ஏற்க வேண்டும் என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள். இதை விளக்க முடியுமா?

★ பதில்: 50ஆம் ஆண்டுகளில் தமிழ்த் தலைவர்கள் சமஷ்டி கோரியதுடன் இந்தப் பிரச்சினை ஆரம்பித்தது என்று நான் கருதுகின்றேன். இனரீதியான பிரிவுணர்வு சமஷ்டிக் கோஷத்துடன் ஆரம்பித்தது. திரு. பண்டாரநாயக சமஷ்டி என்ற கருத்தை விரும்பவில்லை. பிரதேச சபைகளை வழங்கவே அவர் விரும்பினார். இதைப் பலர் எதிர்த்தனர். உண்மையாக எதிர்த்தவர் ஜே. ஆர். ஜெயவர்தன ஐ. தே. க. காரணமாக இந்தப் பிரச்சினையில் சிங்கள சமூகம் பிளவுபட்டிருந்தது பல ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்காரர்கூட பிரதேச சபைகளை விரும்பவில்லை. பின்னர் 1983 வந்தது வகுப்புதாதக் கலவரங்கள் ஏற்பட்டன. பிரபாகரன் இவ்வாறு உருவாகினார். இந்த அளவிற்கு ஐ.தே.க. பொறுப்பை ஏற்க வேண்டும். அரசாங்கத்தில் இருந்த சிலர் இந்த நிலைமையை ஏற்படுத்த அதை அனுமதித்தது. இந்த விஷயங்கள் பற்றி நாம் மிகவும் நேர்மையாக இருக்க வேண்டும். பிரபாகரன் உருவாகியதும் விடுதலைப் புலிகளுடன் போரிட இந்திய ராணுவத்தை ஜே ஆர். ஜெயவர்தனா அழைத்தார். பெருமளவிற்கு அது ஓர் தீர்வாகும்.

பெரும்பான்மை சமூகத்தில் ஏற்பட்ட பிளவால் தான் இந்த முழு நிலைமையும் உருவாகியது என்பது எனது கருத்தாகும். ஜே. ஆர். மாகாண சபைகளை வழங்க விரும்பிய போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்தது. இது ஒரு விந்தை இல்லையா? அப்பொழுது பிரதமராக இருந்த பிரேமதாசவும் வன்மையாக ஆட்சேபித்தார் அவர் ஜனாதிபதியாகிய போது இந்திய ராணுவம் அனுப்பப்பட்டது. ஆனால் திருமதி பண்டாரநாயக்கா நாடாளுமன்றில் தாம் நிகழ்த்திய உரை ஒன்றில் பின்வருமாறு கூறினார். "இந்திய ராணுவத்தை அனுப்பியது பிரேமதாச செய்த மிக முட்டாள்தனமான செயலாகும்."

இது இடைவிடா முரண்பாட்டின் ஓர் உதாரணம் ஆகும்.

மாகாண சபைகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காட்டிய எதிர்ப்பு தெற்கில் பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது. ஜே.வி.பி. முழுப்பலத்துடன் வெளியே வந்தது. பிரேமதாச இந்திய ராணுவத்தை விரைவில் அனுப்பியதற்கு ஜே. வி. பியும் ஒரு காரணம் ஆகும்.

*புகழ் பெற்ற கெரில்லாத் தலைவர்*

தேர்தல் பிரச்சாரத்தின் போது சந்திரிகா குமாரதுங்க என்ன கூறினார்? "இந்திய அரசாங்கம் பிரபாகரனை நாடு கடத்துவதை நான் அனுமதிக்கமாட்டேன்" என்று அவர் கூறினார். பிரபாகரன் [illegible] நிரூபிக்கப்பட்டுள்ளன, அவரை நாடு கடத்த வேண்டும் என்று இந்திய அரசாங்கம் கூறியது. "பிரபாகரன் ஒரு இலங்கை பிரஜை ஆகவே நான் அதை அனுமதிக்க மாட்டேன்" என்று சந்திரிகா கூறினார். அவர் அப்பொழுது யாழ்ப்பாண வாக்குகளை, தமிழ் வாக்குகளை எதிர்பார்த்தார். பிரபாகரனைப் பாராட்டும் முறையில் நான் ஒன்றைக் கூற வேண்டும். இன்று அவர் பலரின் வீரன். பல தசாப்தங்களாக நிமிர்ந்து நிற்க முடியாதவர்கள் இன்று எழுந்து நிற்கிறார்கள். எப்படிப் போரிடுவது எப்படி மடிவது என்பது பிரபாகரன் சிங்களவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார். அவர் உலகின் மிகவும் புகழ்பெற்ற கெரில்லாத் தலைவர் ஆகியுள்ளார். மூன்றாம் ஈழம் யுத்தம் ஆரம்பித்த போது திருமதி குமாரதுங்க வழமையான முரண்பாடான முறையில், "இந்தியா, தயவு செய்து எனக்கு உதவு" என்று கூறுகின்றார்.

*வெளிநாட்டு உதவி*

★ கேள்வி: அரசாங்கத்துக்கு உதவ யூ என்.பி. முன்வந்தது ஆனால் ஜனாதிபதி குமாரதுங்க அதை ஏற்றுக்கொள்ள ஆர்வம் காட்டவில்லை என்று நீங்கள் கூறியது பற்றி.....

★ பதில்: இந்தத் தேசிய நெருக்கடியில் அவருக்கு உதவத் தயார் என்று நாம் கூறினோம். "எனக்கு உங்கள் உதவி தேவை இல்லை. மற்றக் கட்சிகள் அனைத்தினதும் ஆதரவு எனக்குண்டு," என்று அவர் கூறினார். அரசியல் வரலாறு பற்றிய அறிவு சந்திரிகாவுக்குப் போதாது என்று நான் கருதுகிறேன். அவரிடம் மமதையும் உண்டு என நான் நினைக்கின்றேன். "நான் 62 சதவீத வாக்குகள் பெற்றவர்" என்று அவர் நினைக்கின்றார் போலும். ஆனால் அந்த 62 சதவீதம் சமநிலையை ஏற்படுத்தவில்லை. நாடாளுமன்றத்தில் சமநிலை ஏற்படுகின்றது. நாடாளுமன்றத்தில் அவருக்கு ஒரு சிறிய பெரும்பான்மை தான் உண்டு. ஆகவே எம்முடைய உதவி அவருக்குத் தேவை. நாடாளுமன்றத்தைப் பொறுத்தவரையில் எமக்கு 42 சதவீதம் உண்டு.

★ கேள்வி: வடக்கு கிழக்கு நெருக்கடியைத் தீர்க்க வெளிநாட்டுத் தலையீடு ஏற்படும் பட்சத்தில் உங்கள் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

★ பதில்: இத்தடவை வெளிநாட்டுத் தலையீடு ஏற்படும் என்று நான் கருதவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெளிநாட்டுத் தலையீட்டை நாடினால் அது கோட்பாடற்ற செயலாக அமையும். யூ.என்.பியும் இந்த விஷயத்தில் கோட்பாடற்றதாக இருக்கும். ஏனென்றால் எமது கட்சியின் தலைவர் தான் இந்திய இராணுவத்தை வெளியே அனுப்பியவர். ஆகவே விடுதலைப் புலிகளுடன் போரிடுவதற்கு இந்தியா ஒருபோதும் இராணுவத்தை அனுப்பமாட்டாது என்று நான் கருதுகின்றேன். இது ஸ்ரீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினை என்று ராவ் தெளிவாகக் கூறியிருக்கிறார். இராணுவம் ஒன்றை அனுப்புவது அல்ல எங்களுடைய இப்பொழுதைய தேவை வேறுபல விஷயங்களைச் செய்யலாம். சரியான அரசியல் வழிகாட்டலில் தந்திரோபாயங்களை உருவாக்கி அமுல்படுத்த வேண்டும். கடந்த 20 ஆண்டுகளில் இது ஒருபோதும் நடைபெறவில்லை. [உ]

### வணிகச் சுடர்

யாழ்ப்பாணம், மே, 30

கொக்குவில் இந்துக்கல்லூரி வணிகர் மாணவர் மன்றத்தின் வணிகச் சுடர்—3, நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படும்.

உடுவில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. இரத்தினராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் (ஓ)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் உதவி ஆசிரியர் திரு ஐ. தயாபரன் அவர்களின் தாயாரான

திருமதி

ஐயாத்துரை பொன்னம்மா

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் மிகுந்த கவலை அடைகிறோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அவரது பிரிவால் துயருற்றிருக்கும், குடும்பத்தினருக்கும், எமது ஆழ்ந்த அனுதாபங்களைக் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதிபர்கள்,

ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/நாரந்தனை கணேசவித்.

யா/தம்பாட்டி அ. த. க. பாடசாலை,

நாவற்குழி. [36855]


## தடுத்து வைக்கப்பட்டிருந்த "லங்கா கல்யாணி" வருகை

யாழ்ப்பாணம்,மே 30

வடக்கிற்கான பொருள்களை ஏற்றிய நிலையில் சந்தேகத்தின் பேரில் கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த "லங்கா கல்யாணி" கப்பல் இன்று நண்பகல் காங்கேசன் துறைக்கு வந்து சேரும் என தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கான அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருள்களை ஏற்றிக்கொண்டு இக்கப்பல் கடந்த 19 ஆம் திகதி வடக்கு நோக்கிப்புறப்படத் தயாரான போது—

அக்கப்பலில் வடக்குக்கு ஆயுதம் கடத்திச் செல்லப்படுவதாக சந்தேகம் கிளப்பப்பட்டதும்—

அதனையடுத்து கொழும்புத் துறைமுகத்தில் அது தடுத்து நிறுத்தப்பட்டிருந்ததும் தெரிந்ததவையே.

அக்கப்பல் தீவிரமாக சோதனை செய்யப்பட்ட பின்னர் வடக்கு நோக்கிச் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பதாக தற்போது செய்தி கிடைத்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து புறப்பட்ட இக்கப்பல் இன்று பிற்பகல் காங்கேசன் துறைக்கு வந்து சேரும் என்றும்—

பொருள் இறக்கும் பணி நாளை பருத்தித்துறையில் ஆரம்பிக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (உ-3-4)

## செவ்வாய்க்கிழமைகளில் இனி "சீடான்ஸர்" சேவை

யாழ்ப்பாணம், மே 30

திருகோணமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள 'சீடான்ஸர்' கப்பல் அடுத்த மாதம் முதல் பிரதி செவ்வாய்க்கிழமைகளிலேயே தனது சேவையை நடத்தவிருக்கிறது.

திருகோணமலையில் இருந்து திங்கட்கிழமைகளில் புறப்பட்டு பருத்தித்துறைக்கு செவ்வாய்க்கிழமை வந்து சேரும் "சீடான்ஸர்" அன்றையதினமே திருகோணமலை நோக்கிப் புறப்படும்.

இதுவரை காலமும் இந்தச் சேவை பிரதி புதன்கிழமைகளில் நடந்து வந்தது.

அதேவேளை — இவ்வாரத்துக்கான சேவை வழமை போல் நாளையே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

## விளையாட்டு நிகழ்வுகள்

"உதயன்" கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் திக்கமுனையில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி — வதிரி பொமேர்ஸ் வி.க அணி எதிர் வல்வை "ஏ" அணி.

★ 4.45 மணி — நாகர்கோவில் கோல்ட்ஸ்ரார் வி.க அணி எதிர் கரணவாய் கொலின்ஸ் வி க அணி (உ-3)

★ ★ ★

வண சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் "வாசாலா சகோதரர்கள் சபை" நடத்தி வரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும். ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 மணி — ஜொனியன்ஸ் 'கறுப்பு' அணி எதிர் ஜொனியன்ஸ் 'சிவப்பு' அணி

★ 4 மணி — யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் சென்றலைட்ஸ் 'சொக்ஸ்' அணி

★ ★ ★ (உ-3)

சாவகச்சேரி மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நிலைய மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 மணி — சாவகச்சேரி ரேகா வி. க. அணி எதிர் மீசாலை இலங்கேஸ் வி. க. அணி.

★ 4 மணி — கரவெட்டி நவசக்தி வி க. அணி எதிர் புத்தூர் ஸ்ரீ விக்கினேஸ்வரா வி க 'ஏ' அணி. (உ-117)

### இன்று

சாவகச்சேரி அல்லாரை அ. த. க. பாடசாலையில் பரிசில் நாள்விழா இன்றுசெவ்வாய்க்கிழமை அதிபர் செல்வி தி. வேலுப்பிள்ளை தலைமையில் பாடசாலை அரங்கில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்கிறார். [ஓ-117]

★ ★ ★

சண்டிலிப்பாய், மே 30

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும், சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் பாலர் பாடசாலையினதும், துர்க்கா விளையாட்டுக் கழகத்தினதும் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறும். பிரதம அதிதியாக வலி. மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா கலந்து கொள்வார். (க-135)

### நாளை

சண்டிலிப்பாய், மே 30

வித்துவான் பொன். கந்தசாமியினால் எழுதப்பட்ட "நுணசையந்தாதி" நூல் வெளியீட்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை பிற்பகல் மானிப்பாயில் இயங்கும் மாதகல் நுணசை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

திரு. வி. சிற்றம்பலம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றே. இருதயநாதர் கலந்துகொள்வார். வெளியீட்டு விழாவை அடுத்து கனடா - மாதகல் நலன்புரி அமைப்பினால் மாதகல் கிராமத்தை சேர்ந்த 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் பரிசில் வழங்கும் வைபவம் இடம்பெறும். (உ- 135)

★ ★ ★

தெல்லிப்பளை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் மகாஜனக் கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்திய சதுரங்கச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை மாலை 4 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பொறியியலாளர் திரு. சி. தயாபரன் கலந்து கொள்வார். யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் திருமதி தயாபரன் பரிசில்களை வழங்குவார். (உ)

### இலக்கிய சுவை

குருநகர், மே 30

திருமறைக் கலாமன்ற யாழ். பிரதான வீதி, கேட்போர் கூடத்தில் நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு 'இலக்கிய சுவை' நிகழ்ச்சி நடைபெறும்.

இலக்கியக் கருத்துரையை ஆசிரியர் திரு. எஸ். எஸ். பி. அமல்ராஜ் நிகழ்த்துவார். (ஓ-51)


## கண்ணீர் அஞ்சலி

செல்வி சுந்தரமூர்த்தி பரிமளா

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி H. N. D. C. 2 ஆம் வருட மாணவி செல்வி சு. பரிமளா அவர்களின் மறைவு கேட்டு பேரதிர்ச்சி உற்றோம். அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தவர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

H. N. D. C

1 ம் வருட மாணவர்கள்.

(36857)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லராவவில் தாக்குதல் நடந்த வேளை காட்டுக்குள் ஓடி ஒளித்த சிப்பாய்கள்!

## மேலதிக துருப்புக்கள் வந்த பின்பே வெளியே வந்தனராம்

கொழும்பு, மே 30

கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையில் உள்ள கல்லராவ மீனவ குடியேற்ற வாசிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது கல்லராவ இராணுவ முகாமில் இருந்த சிப்பாய்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

பாதுகாப்பு வட்டாரங்கள் இது குறித்து தற்போது விசாரித்து வருவதாக 'சண்டே ஐலண்ட்' வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் போது பெரும்பாலும் சிங்களவர்களும், முஸ்லிம்களுமாக சுமார் 42 பேர் கொலைப்பட்டது தெரிந்தே.

தாக்குதல் நடத்தப்பட்ட போது குடியேற்ற வாசிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த ராணுவ முகாமில் 9ஆவது சிங்க ரெஜிமென்டைச் சேர்ந்த 40 சிப்பாய்கள் இருந்தனர்.

தாக்குதல் நடத்த வந்தவர்களைத் தாம் தாக்கியதாக முகாமில் இருந்த சிப்பாய்கள் தெரிவித்தனர்.

ஆனால் சிப்பாய்களில் ஒருவராவது கொல்லப்படவோ அல்லது காயமடையவோ இல்லை என்றும்

பெரும்பாலான சிப்பாய்கள் ஒரு வேட்டாவது தீர்க்காமலேயே காட்டுக்குள் தப்பி ஓடி விட்டனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம் கல்லராவ குடியேற்ற வாசிகளைப் பாதுகாக்கும் முகமாக, இந்த குடியேற்றக் கிராமத்துக்கான பாதை வழியே அமைக்கப்பட்டிருந்த, பதுங்கு குழிகளில் மொத்தம் 35 சிப்பாய்கள் மூன்று முதல் ஐந்து வரையிலான குழுக்களாக காவலுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர் ஏனைய ஐவரும் முகாமுக்குள் தங்கி இருந்தனர்

ஆனால் சம்பவதினம் தாக்குதல் நடத்தியோர் எந்த வித எதிர்ப்பும் இன்றி கிராமத்துக்குள் வந்து விட்டனர் என்றும்

சிப்பாய்களிடமிருந்து, எதிரிகள் வருவது குறித்து எந்த வித அறிவிப்பும் தமக்குக் கிடைக்க வில்லை என்றும் உயிர் தப்பிய கிராமவாசிகள் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடைபெற்று முடிவடையும் வரை பெரும்பாலான சிப்பாய்கள் காட்டுக்குள் ஒளித்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக துருப்புக்கள் இப்பகுதிக்கு அனுப்பப்பட்ட போது முகாமில் இருந்த சிப்பாய்களில் பத்துப் பேரைக் காணவில்லை என்று முதலில் தெரிவிக்கப்பட்டது

ஆனால் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க பின்னர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் சிப்பாய்கள் அனைவரும் இருப்பதாக தெரிவித்தார்.

தாக்குதல் ஆரம்பமான சமயம் குடியேற்றவாசிகளில் பலர் காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டனர். சிலர் கடலை நோக்கி ஓடினர் கிராமத்துக்குள் சிக்கியோரே கொல்லப்பட்டனர்.

இவர்களில் பெரும்பாலானோர் நீர்கொழும்பில் இருந்தும் புத்தளத்தில் இருந்தும் வந்து தங்கியிருந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த இடத்துக்கு மேலதிக துருப்புகளை அனுப்புவதிலும் தாமதம் ஏற்பட்டது.

இத் துருப்புக்கள் செல்லும் பாதையில் கண்ணிகள் வைக்கப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்பட்டதே இதற்குக் காரணம்.

நீண்ட நேரத்துக்குப் பின்பே திரியாய் இராணுவ முகாமில் இருந்து மேலதிகப் படைகள் சம்பவம் நடந்த இடத்தை அடைந்தன.

மேலதிக துருப்புக்கள் சம்பவம் நடந்த இடத்தை அடைந்த போது, அங்கிருந்த இராணுவ முகாம் எரிந்து தரை மட்டமாக்கப்பட்டிருந்ததைக் கண்டனர்.

வழமையான சம்பவம் போன்று முகாம் பகுதியில் எந்த ஒரு சிப்பாயின் சடலத்தையும் அவர்கள் காணவில்லை. காயமடைந்த சிப்பாயின் ஓலத்தையும் கேட்கவில்லை.

மேலதிக துருப்புக்கள் வந்து சேர்ந்த இரண்டு மணித்தியாலத்துக்குள் அந்த முகாமைச் சேர்ந்த சகல சிப்பாய்களும் காடுகளுக்குள் இருந்து அங்கு வந்து சேர்ந்து விட்டனர்.

குடியேற்றக் கிராம வாசிகளைப் பாதுகாப்பதற்காக அமர்த்தப்பட்ட சிப்பாய்கள், குடியேற்றவாசிகளை தவிக்க விட்டு விட்டு தாம் காட்டுக்குள் ஓடித் தப்பிக் கொண்டது குறித்த இராணுவ விசாரணை நடைபெற உள்ளது என ''சண்டே ஐலண்ட்'' மேலும் தெரிவிக்கிறது

(இ)

## பலியான 42 பேரின் சடலங்கள் அ' புரவில்!

### உறவினரிடம் ஒப்படைப்பு

திருகோணமலை மே 30

திருகோணமலை மாவட்டம் கல்லராவவில் கொலையுண்ட முஸ்லிம், சிங்கள மக்கள் 42பேரின் சடலங்கள் கடந்த சனிக்கிழமை அனுராதபுரத்துக்கு எடுத்து வரப்பட்டன. பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதேவேளை, கல்லராவ தாக்குதலில் காயமடைந்து திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஐவரில் ஒருவர் கடந்த சனிக்கிழமை அங்கு மரணமானார் இதை அடுத்து பலியானோரின் எண்ணிக்கை 43ஆக அதிகரித்துள்ளது.

(ஒ)

## திருமலையில் பதற்றம்; அசம்பாவிதம் இல்லை

திருகோணமலை, மே 30

கல்லராவ தாக்குதல் சம்பவத்தை அடுத்து திருகோணமலை நகரில் பதற்றநிலை காணப்பட்டது ஆனால் அசம்பாவிதம் எதவும் இடபெறவில்லை.

கடந்த சனிக்கிழமை நகரின் பிரதான பகுதிகளில் சனக்கூட்டம் மிகக் குறைவாக இருந்தது பஸ்களில் குறைந்த எண்ணிக்கையானவர்களே பயணம் செய்தனர்.

[ஒ]

## ஊழல் அரசியல்வாதிகளை புலிகள் தண்டிப்பர்!

### தமிழகத்தில் இப்படி எச்சரிக்கை

சென்னை, மே 30

''ஊழல் அரசியல்வாதிகளை விடுதலைப்புலிகள் தண்டிப்பர்.'' — என எச்சரிக்கும் வாசகங்கள் தமிழகத்தில் இப்போது காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

''கோடிகோடியாக மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும் ஊழல் அரசியல்வாதிகளே! தம்பி பிரபாகரனைப் பற்றிப் பேச இந்த நாட்டில் எவனுக்கும் அருகதை இல்லை. இந்த நாட்டின் சட்டங்களிலிருந்து நீங்கள் தப்பிக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகளின் தண்டனையிலிருந்து நீங்கள் தப்ப முடியாது. உங்களுக்கு எங்களின் அனுதாபங்கள்!'' — இப்படி எழுதப்பட்டுள்ள வாசகங்கள் பொதுமக்களின் பார்வையில் படும்படி மதுரை மேலைச்சித்திரைவீதியில் உள்ள அலுவலகம் ஒன்றின் வாசலில் உள்ள அறிவிப்புப் பலகையில் காணப்படுகின்றது.

நெடுமாறனுடைய தமிழர் தேசிய இயக்கத்தின் தென்மாவட்ட தலைமை அலுவலகத்தின் வாசலிலேயே இவ்வாசகம் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

(உ)

## சமாதான வாய்ப்பை சந்திரிகா அரசு இழந்தது!

### இந்திய மக்கள் கழகம் கண்டனம்

லண்டன், மே 30

''ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதானத்துக்கான மக்களின் ஜனநாயகத் தீர்ப்பு ஒன்றை வீணாக்கி ஸ்ரீலங்காவிலான சோகமோதலை முடிவுக்குக் கொண்டு வரும் வாய்ப்பை இழந்தார்.''

இந்திய வம்சாவளி பிரிட்டிஷ் கழகம் இவ்வாறு ஜனாதிபதியைக் கண்டித்துள்ளது.

இந்த ஸ்தாபனத்தின் தலைவரான திரு சின்னமணி பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மனித உரிமை ஆதரவாளர்களுக்கும் உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதியின் நிலைப்பாடு எது என்பது தெரியவில்லையென்று கூறினார்.

ஜனாதிபதி முரண்பாடாகப் பேசுகின்றார் ஒரு கணம் அவர் விடுதலைப் புலிகளின் தலைவரைப் பாராட்டுகின்றார்; மறு கணம் கொலைகாரன், பைத்தியக்காரன் என்று திட்டுகிறார் என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதை சர்வதேச சமூகம் கவனிக்காமல் இருப்பது வருத்தத்துக்குரியது எனவும் அவர் கூறினார்

(ஓ-அ)

## கடந்த சனியன்று முதற்தடவையாக மட்டு. நகருக்கு மேலே உயரத்தில் பறந்த ஹெலி!

மட்டக்களப்பு, மே 30

வடக்கில் பலாலிக்கு அருகில் இரு அவ்ரோ விமானங்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்ததன் பின், கடந்த சனிக்கிழமை முதற் தடவையாக விமானப்படை ஹெலிக்கொப்டர்கள் மட்டு நகரில் மிக உயரத்தில் பறக்கக் காணப்பட்டன.

இதேசமயம் கடந்த சனிக்கிழமை இரவு மட்டக்களப்பில் தரவைக்குளம் முகாம் தகர்ப்புத் தாக்குதலின் போது படையினருக்கு உதவ வந்த ஹெலி ஒன்று தாக்குதலில் சேதமடைந்தது தெரிந்ததே.

இதற்கிடையே, மட்டக்களப்புக்கு தனியார் துறை விமானங்கள் வந்து செல்கின்றன.

(தூ)

## கல்முனை முஸ்லிம் மாகாணம் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்

### தெரிவுக்குழுவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் யோசனை

கொழும்பு, மே 30

''தற்போதைய அம்பாறை மாவட்டத்தில் உள்ள அம்பாறைத் தொகுதி தவிர்ந்த பிரதேசத்தை கல்முனை மாகாணமாகப் பிரகடனப்படுத்தி, அதனை முஸ்லிம் மாகாணமாக அறிவிக்க வேண்டும்''

—இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி யோசனை தெரிவித்துள்ளது.

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் சாட்சியம் அளித்த போதே. இக் கருத்து முன்வைக்கப்பட்டது,

இத்தகவலை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், கப்பல் துறைமுகங்கள், புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான அல்ஹாஜ் எம். எச். எம். அஷ்ரப் வெளியிட்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் தெரிவுக் குழுவுக்கு முன்வைத்த யோசனைகளாவன.

★ கல்முனை முஸ்லிம் மாகாணம் என்ற கோரிக்கையுடன், வடக்கில் மன்னார் மாவட்டம் நீங்கலாக உள்ள பிரதேசங்களை தமிழ்மாகாணமாக பிரகடனப் படுத்தல் வேண்டும்.

★ இந்த இரு மாகாணங்களுக்கும் இடையில் நிலத் தொடர்பு இல்லாத பிரதேசங்களை இனங்கண்டு முஸ்லிம் பிரதேசங்களை முஸ்லிம் மாகாணத்துடனும், தமிழ் பிரதேசங்களை தமிழ் மாகாணத்துடனும் இணைத்தல்.

★ வாக்காளர் ஒருவருக்கு இரண்டு வாக்குச் சீட்டுக்களை வழங்குதல்.

இதில் ஒன்றை தொகுதி ரீதியாகப் போட்டியிடும் வேட்பாளருக்கும், இரண்டாவது வாக்கை தேசிய கட்சிக்கும் வழங்க வேண்டும்.

★ உறுப்பினர் தெரிவு தொகுதியாக 110 ஆகவும், தேசிய ரீதியாக 110 ஆகவும் இருக்க வேண்டும். இதன் பின்னர் வாக்குச் சீட்டுக்களை கணக்கெடுத்து தேசிய ரீதியில் கட்சிகளுக்கு இடையில் நாடாளுமன்ற அங்கத்துவத்தை தேர்தல் ஆணையாளர் பிரகடனப்படுத்த வேண்டும். பின்பு தொகுதி அடிப்படையிலான அங்கத்தவர்களில் இருந்து தேசிய ரீதியில் தெரிவாவோரின் எண்ணிக்கையை கழித்து வரும் வித்தியாசத்தை தேசிய பட்டியல் முறையில் வழங்க வேண்டும்.

★ தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் வேறு கட்சிகளுக்கு மாற அனுமதிக்கக் கூடாது அதே சமயம் தொகுதி ரீதியில் தெரிவாவோர் வேறு கட்சிகளுக்கு மாறலாம்; ஆனால் அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் ஒன்று நடத்தப்படல் வேண்டும்.

★ மனித உரிமைகள் சட்டங்கள் தொடர்பாக நாடாளுமன்றில் சட்டங்கள் இயற்றப்படும் போது அல்லது மாற்றப்படும்போது இஸ்லாமிய ஷரீ அத் சட்டத்துக்கு முரண்படாது செய்ய வேண்டும்.

—இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் யோசனை தெரிவித்துள்ளது.

[ஜ-5]

## அரசின் உத்தேச இந்திய மாதிரி தீர்வு; தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு, மே 30

வடக்கு – கிழக்கில் அரசாங்கம் அமைக்க உத்தேசிக்கும் இந்திய மாதிரி நிர்வாகத்தைப் பொறுத்து தமிழ் அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன; சில கட்சிகள் கருத்துத் தெரிவிக்காமல் உள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க கொழும்பில் நடைபெற்ற பல்வேறு கலந்துரையாடல்களின் போது தாம் அமுல்படுத்த இருக்கும் இந்திய மாதிரி பற்றி அறிவித்துள்ளார்.

இதை ஏற்றுக்கொள்வதா அல்லது சமஷ்டி அரசமைப்புடன் கூடிய சமஷ்டி அரசுக்காக நிற்பதா என்பது பற்றி தற்பொழுது கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

''தசண்டே லீடர்'' பத்திரிகையில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் இந்திய மாதிரியை அமுல்படுத்துவது என்றால் ஒற்றையாட்சி அரசாங்க அமைப்பு முற்றாக ரத்துச் செய்யப்பட வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல் எவ் கருத்துத் தெரிவித்துள்ளது

அரசாங்கம்தான் அமுலாக்கவிருக்கும் அமைப்பின் அம்சங்கள் பற்றி எழுத்து மூலம் விளக்கம் தராத நிலையில் தான் அது பற்றி அபிப்பிராயம் தெரிவிக்க விரும்பவில்லை என்று அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்த இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், பெயரைப் பற்றி நான் கவலைப்படவில்லை வடக்கு–கிழக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட்டால் போதும்.

இந்திய மாதிரியைப் பொறுத்தவரை அது எழுத்தில் தயாரிக்கப்பட்டு மக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டபின் அமுலாக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

[ஒ-க]

## பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த செய்த உயர்மட்ட மாற்றங்கள் குறித்து ராணுவத்தில் அதிருப்தி; குழப்பநிலை!

கொழும்பு, மே 30

இராணுவ உயர் பீடத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்த கடந்த வாரம் செய்த மாற்றங்கள் இராணுவத்தில் அதிருப்தியையும் குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ளதாக அறிய வருகின்றது

தாம் இந்த மாற்றங்களை வன்மையாக எதிர்க்கின்ற போதிலும் செய்யமுடியாத உத்தரவுகளை நிறைவேற்றத் தாம் நிர்ப்பந்திக்கப்படுவதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கூறினார்கள்.

ஆட்களில் ஏற்பட்ட மாற்றம் யுத்த தந்திரத்திலும் மாற்றத்தைக் குறிக்கின்றது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏப்ரல் 19ஆம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததும் புலிகளைக் கிழக்கிலிருந்து வெளியேற்றி வடக்கிற்குத் தள்ளிவிடும் யுத்த தந்திரம் ஒன்றை அமுல்படுத்த இராணுவம் தயாராகியது.

கேணல் ரத்வத்த இந்தத் திட்டத்தை நிராகரித்து யாழ்ப்பாணத்தில் நகரப்பாங்கான யுத்தம் நடத்துவதை ஆதரித்தார். இராணுவம் இது 'செய்ய முடியாத பணி' என்று கூறியது

மூன்று வாரங்களுக்கு முன்னர் மேஜர் ஜெனரல் ஏ எம் யு. செனிவிரத்ன கூட்டுமொத்த நடவடிக்கைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இது யுத்தத்தைக் கையாள அரசாங்கம் நியமித்துள்ள அதியுயர் இராணுவப் பதவியாகும். இப்பொழுது அவருடைய இடத்தில் மேஜர் ஜெனரல் ரோஹன் தலுவத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல்ஜெமுனுகுலதுங்காவை ஜி ஓ சி இரண்டாம் டிவிஷனிலிருந்து இராணுவத் தலைமையகத்தில் அட்ஜூட்டன்ட் ஜெனரலாக மாற்றியமை, பிரிகேடியர் ஜாலிய நம்முனியை அட்ஜூட்டன்ட ஜெனரலிலிருந்து ஜி ஓ சி இரண்டாம் டிவிஷனின் தலைவராக மாற்றியமை, பிரிகேடியர் நிஹால் ஜெயக்கொடியை கண்டி பிரிகேட் தளபதிப் பதவியிலிருந்து இராணுவக் காரியதரிசியாக மாற்றியமை ஆகியனவும்.

ராணுவத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

மேஜர் ஜெனரல ஏ. என் யு செனிவிரத்ன தெண்டர் படையின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு முன்னர் இந்தப் பதவியில் இருந்த மேஜர் ஜெனரல் வஜ்ரா விஜேரத்ன தற்காலிக ''சீவ் ஒவ் ஸ்ராவ்'' வாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பாரிய மாற்றங்கள் பற்றி பாதுகாப்பு அமைச்சு தக்க காரணத்தைக் காட்டவில்லை.

போர்முனையில் உள்ள படையினரை இந்த மாற்றங்கள் பெரிதும் [illegible] என்று இராணுவம் [illegible] றது.

## புலிகள் தாக்கலாம் என்று அச்சம்

### நாடாளுமன்றப் பகுதியில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு

கொழும்பு, மே 30

நாடாளுமன்றத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக கொழும்பு கோட்டே பகுதியில் நாடாளுமன்றத்தையும் அதைச்சூழவுள்ள பிரதேசங்களிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றத்தைப் பாதுகாப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பைக் கோரியுள்ள பொலிஸார், அப்பிரதேசத்தில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடக்கூடிய நபர்கள், உல்லாசப் பயணிகள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் பற்றியும் அநாதரவாக விடப்பட்டிருக்கும் வாகனங்கள், எலக்ட்ரோனிக் உபகரணங்கள், ரிமோட் [illegible] இயங்கும் சிறிய விளையாட்டு விமானங்கள், [illegible] தகவல் தரும்படி [illegible]

(உ)

## அரசமைப்பு சீர்திருத்தம் குறித்து மக்களின் கருத்தை அறிவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்

### அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு மே 30

அரசமைப்பு சீர்திருத்தம் குறித்து மக்களின் கருத்தை அறிவதற்காக சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படும்.

— நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான ஜி எல் பீரிஸ் இத் தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அரசமைப்பு சீர்திருத்தத்துக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு வெகு மும்முரமாகச் செயற்படுவதாக அமைச்சர் மேலும் சொன்னார்.

உத்தேச அரசமைப்பு நகல் சட்டம் இறுதியாக்கப்பட்டதும் அது நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படும். நாடாளுமன்றம் அதனை அங்கீகரித்ததும், மக்கள் கருத்தறிவதற்காக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றுக்கு அந்த அரசமைப்புச் சீர்திருத்தம் முன்வைக்கப்படும்

அநேகமாக எதிர்வரும் ஜூன் 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் உத்தேச அரசமைப்புச் சீர்திருத்த நகலை நாடாளுமன்றம் ஆராயும். அதன் பின்னர் அது மக்கள் முன் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மன்னிப்பு வழங்குவது தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரம் புதிய அரசமைப்பிலும் தொடர்ந்து பேணப்படும் என்றும் —

ஜனாதிபதிக்கு மிகக் குறைவான நிறைவேற்று அதிகாரங்களே புதிய அரசமைப்பில் வழங்கப்படும் என்றும் —

அரசமைப்பு விவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தேச அரசமைப்பு சீர்திருத்தத்தின்படி, பிரதமரின் ஆலோசனையின் பேரிலேயே ஜனாதிபதி செயற்படுவார். ஜனாதிபதித் தேர்தல் நடைமுறை தொடர்பான சகல விடயங்களையும் நாடாளுமன்றமே முடிவு செய்யும்.

## குமாரதுங்கவின் தாயார் ஆணைக்குழுவுக்கு கடிதம்

கொழும்பு மே 30

விஜய குமாரதுங்க கொலை குறித்து விசாரணை நடத்தி வரும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு விஜய குமாரதுங்கவின் தாயார், கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் சில உறுப்பினர்களையும் சாட்சியமளிக்க அழைக்கும்படி கேட்டுள்ளார்.

அத்தகையவர்களின் சாட்சியங்கள் கொலை பற்றிய உண்மையை அம்பலப்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனது மகனின் நெருங்கிய நண்பரும், அரசியல் சகாவும், தற்போது ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் செயலாளருமான இரு பிரேமசிறி பெரேரா இக்கொலை பற்றி அறிவைத் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் முன் இவர் அழைக்கப்பட்டால், எனது மகனின் கொலை பற்றிய உண்மையை அம்பலப்படுத்தும் சாத்தியம் இருப்பதையும் அவர் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டி எழுதியுள்ளார்.

(ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்


**வாங்கலாம் விற்கலாம்**

நாஷனல் RX றேடியோ கசற் செற்கள் 12'', 14'' கறுப்பு வெள்ளை தொலைக் காட்சிகள் நியாய விலையில் வாங்கவும் விற்கவும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்: வீனஸ் டிக்கா வாசகன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [வானவில் கூல்பார் அருகில் ஆரியகுளம் சந்தி.]

(சி-1410)

**ஆண்டு 5 புலமைப்பரிசில்**

ஆண்டு 5 புலமைப்பரிசில் 95 பரீட்சைக்கான புதிய பாடத்திட்டப்படி பயிற்சி வினாத்தாள்கள் (விடைகளுடன்) ஒவ்வொரு மாதத்தின் 2ஆவது 4ஆவது ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. அடுத்த வெளியீடு 28-5 95 பயிற்சி வினாத்தாள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[8559]

**தேவை**

அரிந்த கொன்கிறீட் கற்கள் தேவை. எம்முடன் தொடர்பு கொள்ளவும்: இல 6, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [36850]

**சனி மாற்றம்**

2-6-95 சனி மாறப்போகின்றது ஆத்மஜோதி திரு. நா. முத்தையா எழுதிய யோகர் சுவாமிகளின் தெய்வீக வரலாறும் அடங்கியது. ரூ. 10/- எங்கும் விற்பனையாகிறது கரோனா புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். கணிப்பு சதயா - கட்டுடை.

[8416]


## மட்டக்களப்பில் பதற்றம்!

மட்டக்களப்பு, மே. 30

திம்புலகலா சீலங்கார தேரர் சுட்டுக்கொல்லப்பட்டதன் எதிரொலியாக, மட்டக்களப்பில் சிறிது பதற்றநிலை காணப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை மாலையில் நேரத்துடனேயே மக்கள் வீடுகளைச் சென்றடைந்தனர். (ஒ)

## பாதுகாப்புக்கு மேலதிகமாக 400 பொலீஸார்

பொலநறுவ, மே 30

திம்புலாகலை சீலங்கார தேரர் சுட்டுக் கொலைப்பட்ட சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

தேரரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறயிருப்பதால், பாதுகாப்பைப் பலப்படுத்த, அங்கு மேலதிகமாக 400 பொலீஸார் அனுப்பப்பட்டுள்ளனர்.

(ஒ)

## குமார் கண்டனம்

கொழும்பு, மே 30

தமிழ்க் கட்சிகளுடனான அரசாங்கத்தின் மே 17 ஆம் திகதிய பேச்சுவார்த்தையை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் கண்டித்துள்ளார்.

இக்கட்சிகள் ஜனாதிபதியினதும் அவருடைய அரசாங்கத்தினதும் சபாபாடிகள் மாத்திரமே ஆகும் என்று அவர் கூறியுள்ளார் (க)


**NEW PERADENIYA INSTITUTE**

K K S Road, Kokuvil.

Spoken English BY RAMNATH

Time: 5 – 6

Day: Tuesday and Thursday

Beginning: First of June

(C-1419)



## வீடு விற்பனைக்கு


2¼ பரப்புக் காணியுடன் சகல வசதியும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. கே. கே. எஸ். வீதியில் மின்னவத் அருகே அரசடி ஒழுங்கையில் அமைந்துள்ளது

தொடர்பு-

527, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1277)


## நான்காவது ஆண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம் கந்தர்மடம், ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த

அமரர்

**சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா**

(யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்)

மலர்வு: 03 – 05 – 1955 உதிர்வு: 30 – 05 – 1991

நான்காண்டு கழிந்தாலும் ஆறுமோ எம் கவலை
சிந்தித்துப் பார்த்து சித்தம் கலங்குகிறோம்
பந்தத்தை அறுத்து பாசத்தை மறந்தாயோ
சித்தம் சிவனாகிய தெய்வமே எங்கு சென்றாய்!

கண்ணுங் கருத்துமாய் வளர்த்த அன்புத் தெய்வமே!
எண்ணங்கள் யாவும் கற்பனையாய் நின்றனவே
புண்ணிய வசத்தால் சொர்க்கத்தில் வாழ்க நன்றே
குன்றின் மணியே குலக்கொழுந்தே கண்ணே! மாலை சாத்துகின்றோம்.

ஓம் சாந்தி!

என்றும் சொரிகின்ற கண்ணீருடன் நினைவு கூரும்;

அம்மா, மாமி, சின்னையா,
அக்காமார், மைத்துனர்மார்,
அண்ணர், மருமகள், பெறாமக்கள்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [36843]

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வல்லிபுரம் மாணிக்கம்**

தோற்றம்: 03 – 08 – 1908 திருநிழல்: 16 – 05 – 1988

திதி: 30 – 05 – 1995

அன்புடன் நினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

கிராப்பிட்டி வடக்கு.
நீர்வேலி [36850]

## பளை கோட்ட ஆசிரியருக்கு புதிய சம்பளம்

தென்மராட்சி மே. 30

அரசாங்கத்தினால் 1995 ஜனவரி முதல் வழங்கவென அறிவிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான புதிய சம்பளம் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு நிலுவையுடன் இம்மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட்டு வருகிறது.

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான புதிய சம்பளம் இன்றுசெவ்வாய்கிழமைவழங்கப்படும் என கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் அறிவித்துள்ளார்.

(ஒ-117)

# போருக்கு துப்பாக்கிச் சன்னங்கள் ஒருபோதும் தீர்வாக அமையமாட்டா

கொழும்பு, மே. 30

''வடக்கு - கிழக்கில் நிகழும் போருக்கு, துப்பாக்கிச் சன்னங்கள் ஒருபோதும் தீர்வாக அமையமாட்டா......

இதுவே, வடக்கு - கிழக்கிலும், தெற்கிலும் வாழும் மக்களிடையே நிலையான சமாதானமும், இணக்கம், சகோதரத்துவம் என்பனவும் ஏற்படும் பொருட்டு, புத்தரால் விடுக்கப்படும் ஒரே செய்தி''

ஸ்ரீலங்கா ரமண நிகாயாவைச் சேர்ந்த வண. மடிடிய வெல விஜிதசேன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மதச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

புத்தபிக்குகள் கட்டாயமாக தமிழ் மொழியை கற்றுக் கொண்டு இந்த பிராந்தியம் முழுவதும் பௌத்த மதத்தை பரப்ப வேண்டும்.

இவ்வாறு பிக்குகளுக்கு தமிழ் மொழியைக் கற்பித்தால், அவர்கள் தம் போதனையை தமிழ் மக்களுக்கும் புகட்ட முடியும்.

பிக்குகள், தமிழ் மக்களுக்கு பௌத்த மதத்தைப் போதிப்பதன் மூலம், வடக்கு-கிழக்கில் வாழும் நூறு பேரையாவது மதம் மாற்ற முடியும்.

தமிழர்களில் அநேகர் இந்து சமயத்தவர்கள் என்பதால், பௌத்தத்தை அவர்களுக்கு போதிப்பது இலகுவானது ஏனெனில் பௌத்தமும், இந்து சமயமும் தமக்கிடையே நெருங்கிய தொடர்புகளை கொண்டவை.

இலங்கை மக்களிடையே நிலவும் அடுத்த பெரிய பிரச்சினை குடி.

இலகுவான குடிவகைகளை பெறும் பொருட்டு, நாடு முழுவதும் மேலும் பல மதுக்கடைகள் திறக்கப்படவுள்ளன.

சில காலங்களுக்கு முன், ''ஏன் இந்த மதுக்கடைகளை அரசு மூடிவிடக் கூடாது?'' என்று சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டேன்.

அதற்கு ''மதுக் கடைகளை மூடி விடுவது என்பது மனித உரிமைகளை மீறும் செயலாகும்'' என்று அவர் பதிலளித்தார்.

எனினும் இந்த மது விற்பனை மூலம் கிடைக்கும் வருமானத்தை, நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

குடிவகைகளை பாவித்துவிட்டு கொலை போன்ற குற்றங்கள் நிகழ்த்தப்படுகின்றன.

இந்தக் குற்றங்கள் மனித உரிமைகளை மீறவில்லையா என்றும் தேரர் கேள்வி எழுப்பினார். (ஒ-5)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே 30

கல்வித் திணைக்களம்யாழ். வலயம் இரண்டின் ஆரம்பக் கல்வித் திறன் விருத்திச் செயற்திட்ட நூல் வெளியீடு இன்று செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இடம் பெறும். (ஒ)


தெல்லிப்பழை
**கிறாஸ் கொப்பேஸ் விளையாட்டுக் கழக**
ஆதரவில்
**மகாஜனக் கல்லூரி சதுரங்க கழகம்**
நடத்திய

## சதுரங்க சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு வைபவம்

காலம்: நாளை 31 – 05 – 1995 (கல்லூரி மண்டபம்) மாலை 3 00 மணி

பிரதம விருந்தினர்:
திரு. திருமதி S தயாபரன்
(பொறியியலாளர் யாழ்/ பல்கலைக்கழகம்)

பங்கு கொண்ட அனைத்து கல்லூரி அணிகள், பொறுப்பாசிரியர்கள், அலுவலர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

(36796) — கிறாஸ் கொப்பேஸ் வி. கழகம்.


## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்: 01 – 06 – 1957

விண்ணில்: 22 – 05 – 1993

**இராமலிங்கம கேசவன்**
[கோபி]

திதி: 30 – 05 – 1995


ஆண்டு இரண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்,
பிரசன்னா என்று பெயர்மாற்ற
வேண்டும் என்றீர்!
ஈராண்டு காலத்தில் பிறந்த எண், நட்சத்திரத்தில்
பாசமுள்ள தங்கையிடம்
பிரசன்னாவாக வந்து புதுப்பிறவி எடுத்துவிட்டீர்
என்று மனம் தேற்றுகின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்பான
பெற்றோரும், உறவினரும்.

124/1, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [36849]

## 8-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 07 – 03 – 1968

ஆண்டவன் அடியில்: 30 – 05 – 1987

**இராஜகோபால் இராஜ்மோகன்**

(மருத்துவபீட மாணவன் - பேராதனை)

அறிவெனும் சுடர்விளக்கே
அன்பின் திருவுருவே
உயிர் காக்கும் வைத்தியனாய்
உலா வருவாய் என்றிருந்தோம்
உயிர்பறிக்கும் காலனவன்
உனைக் கவர்ந்து சென்றதேனோ - மோகா!

உன் பிரிவினால் வாடும்;
குடும்பத்தினர்

திக்கம். [8550]


அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம்

## 76 ஆவது ஆண்டு நிறைவு விழா

நிலையத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடைபெற இருக்கும் கீழ் வரும் கலை, விளையாட்டு போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

* கரப்பந்தாட்ட போட்டி (ஓவர் கேம்)
  விண்ணப்ப முடிவு திகதி — 05 - 06 - 95
* சமூக நாடகப் போட்டி
  (45 நிமிடம் — 60 நிமிடம்)
  விண்ணபப முடிவு திகதி — 20 - 06 - 95

விண்ணப்பப் படிவங்களுக்கும், ஏனைய விபரங்களுக்கும் தினமும் மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் எமது நிலையத்தில் தொடர்பு கொள்ளலாம்.

செயலாளர்
அரியாலை சரஸ்வதி ச. ச. நிலையம்.

182, கண்டி வீதி,
அரியாலை. [36851]



புங்குடுதீவு — நயினாதீவு
பல. நோ. கூ. சங்கம் வ. — து.

## பதவி வெற்றிடம்

**வர்த்தக முகாமையாளர் தரம்:**

1. கல்வித் தகைமைகள்:
   அ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 10 ஆவது சம்பளத்திட்டத்தின் மேற்பார்வைப் பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம். அல்லது 11ஆவது சம்பளத்திட்டத்தின் நான்கு வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்
   ஆ. வர்த்தக/வியாபாரம் தொடர்பான பொருளாதார ரீதியில் விசேடம் பெற்ற பல்கலைக்கழக அல்லது அதற்குச் சமமான தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
   அல்லது
   இ. கூட்டுறவு தராதர (உயர்தரம்) அல்லது க பொ. த (உ. தரம்) 3 பாடங்களில் சித்தியும், சந்தைப்படுத்தல், வழங்கல், பொருள் விநியோகம், பொருள் ஏற்றுமதி இறக்குமதி எனும் துறையில் ஒன்று அல்லது மேற்பட்ட பதவியில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபன மொன்றில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்
2. சம்பளத் திட்டம்:
   905 — 1605 / 40 X 5 — 50 X 10 இதர படிகளும்
3. வயதெல்லை: 22 — 40
4. பிணைரொக்கம்: 3000/-
   ஆதனப்பிணை 5000/-
5. விண்ணப்ப முடிவு திகதி; 15 – 06 – 1995

விண்ணப்பங்களை:

பொது முகாமையாளர்.
புங்குடுதீவு-நயினாதீவு பல நோ. கூ. சங்கம்.
இல.201/1, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
புங்-நயி ப. நோ. கூ. சங்கம்.
யாழ்ப்பாணம்.

(சி/1276)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


### இப்படியும் யுக்தியா?

கொழும்பில் தேசியத் தகவல் நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்த இரண்டு விடயங்கள் கருத்தில் கொள்ளப்படத்தக்கவை.

அரசாங்கம் வடக்கு-கிழக்கில் இன்னும் முழு அளவிலான போரில் ஈடுபடவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளையே மேற்கொள்கிறது. அத்தகைய இராணுவ நடவடிக்கைகள் அரசையும் படைகளையும் பாதுகாக்கும் விதத்திலும், பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளைக் குறைக்கும் விதத்திலும், எதிரியைப் பலவீனப்படுத்தும் விதத்திலுமே நடத்தப்படுகின்றன— என்பது முதலாவதாகும்.

முழு அளவிலான போரை நடத்துவதற்கு ஏற்ற வசதிகள், வாய்ப்புக்கள் இப்போது குறைவு. அந்தக் குறைகள், போதாமைகள், பலமின்மை என்பனவற்றைப் போக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அந்தத் தயாரிப்பு வேலைகள் முடிந்ததும் முழு அளவிலான போர் ஆரம்பிக்கப்படும் என்பது இதன் மறை பொருளாகும்.

இப்போது பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளை இயன்றளவு குறைக்க முயல்கிறோம். முழு அளவிலான போர் ஆரம்பிக்கப்படும் போது பொதுமக்கள் இழப்புக் குறித்து அக்கறைகொள்ள மாட்டோம் — என்பது இன்னொரு பொருள்.

பத்திரிகைகள் பல இப்போது பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வதாகவும், போர் தொடர்பான செய்திகளை அரசாங்கத்துக்கு அசௌகரியம் உண்டாக்கும் விதத்தில் வெளியிடுவதாகவும்— அவர் குற்றஞ்சாட்டினார்.

பத்திரிகைகள் தமது பொறுப்பை உணராவிடில் போர் முழு அளவில் தொடங்கியதும் அவற்றின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று எச்சரிக்கும் முறையிலும் சந்திரிகாவின் பேச்சு அமைந்தது.

திறமை வாய்ந்ததும், பொறுப்பு வாய்ந்ததுமான இராணுவம் ஒன்றைக் கட்டி எழுப்பவே அரசு விரும்புகிறது. முரண்பாடான தலைமைத்துவத்துடன், நாளுக்கு நாள் மாற்றமடையும் முரண்பாடான தந்திரங்களைக் கையாளும் ஒரு பிளவுபட்ட இராணுவத்தை வைத்திருக்க அரசு விரும்பவில்லை— என்பது சந்திரிகா தெரிவித்த கவனத்தில் எடுக்க வேண்டிய இரண்டாவது விடயம்.

இப்போதுள்ள இராணுவம் பிளவுபட்டிருக்கிறது. தலைமைத்துவத்தில் முரண்பாடு உண்டு. அதனிடம் திறமை இல்லை; பொறுப்பும் இல்லை— என்பதே முப்படைகளின் தளகர்த்தரான ஜனாதிபதியின் மதிப்பீடு.

இவற்றைச் சரி செய்து சீர்படுத்த வேண்டும். அதன் பின்னர் முழு அளவிலான போரைத் தொடங்குவதே உசிதமானது என்று சந்திரிகா கருதுகிறார் போலும்!

அதிகாரம் ஜனாதிபதியிடம் நிறைந்து வழியலாம். ஆனால் போர் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இராணுவ அதிகாரிகளைச் சீண்டும் விதத்தில் சீர்திருத்த நடவடிக்கைகள் அமையுமானால் நட்டம் அரசாங்கத்துக்குத்தான்!

தான் நினைப்பது போல, தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் இராணுவத்தை ஜனாதிபதி நிமிர்த்தி எடுப்பதற்கு அதற்கான நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் வெளியே வராதிருப்பது அவசியம் அதற்காகவே பத்திரிகைத் தணிக்கை அவருக்கு அவசியமாகத் தேவையாகிறது!

அந்தத் தணிக்கையைக் கொண்டு வந்தால் தாம் சர்வாதிகாரியாவதற்குப் பெரிதும் உதவும் என்றும் சந்திரிகா கருதியிருக்கலாம். அதனோடு தெற்கின் பல பிரச்சினைகளை நசுக்கி மறைத்து விடலாம்.

தனது இராணுவத்தில் திருப்தியில்லை; சீராக்க வேண்டியிருக்கிறது; நேராக்க வேண்டியிருக்கிறது என்று கூறி விடுதலைப் புலிகளைத் திசை திருப்புவதற்கான ஒரு தந்திரமாகவும் இது அமையலாம் போர்க் காலங்களில், இத்தகைய யுத்திகளுக்குக் குறைவிருப்பதில்லை!

---

கிழக்கில் பாரிய இராணுவ நடவடிக்கை:

# காடுகளில் தேடுதல் நடத்துவதற்கு அணி அணியாகப் படை விரைவு

## பஸ்கள் மூலம் 400 படையினர் படுவான்கரைக்கு

மட்டக்களப்பு, மே 30

பொலன்னறுவ மாவட்ட எல்லையை நோக்கி ஆயிரத்துக்கும்மேற்பட்ட இராணுவத்தினர்—மூன்று முனைகள் ஊடாக—முன்னேற முயன்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பில் இருந்து புறப்பட்ட படையினர், குறிஞ்சா முனையில் தற்காலிக முகாம் ஒன்றை அமைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது:

கிரானில் இருந்து புறப்பட்ட படையினர் புலிபாய்ந்த கல், தரவை, வடமுனை, மீயான்குளம் ஊடாக செல்வதாகவும் —

மற்றைய அணி கொக்கட்டிச்சோலை முகாமில் இருந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படையினர் விடுதலைப்புலிகளைத் தேடி மதிய காட்டுப் பகுதிகளை நோக்கிச் செல்வதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 1990ஆம் ஆண்டுக்குப் பின் கிழக்கில்] நடைபெறும் மிகப் பெரியஇராணுவ நடவடிக்கை இது என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### காடுகளுக்கு கவச வாகனங்கள்

சுமார் 400க்கும் மேற்பட்ட படையினர் பஸ்கள் மூலம் கடந்த வார இறுதியில் மட்டக்களப்பில் இருந்து படுவான்கரைக்குச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. முகாம்களில் இருந்து படையினருக்கு உதவியாக இராணுவ கவச வாகனங்களும் காடுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனவாம்.

இதேவேளை, பாவற்கொடிச்சேனையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த தேடுதலின் போது செல்வராணி என்பவரும், கொத்தியாவலையில் துரைராஜசிங்கம் என்ற இளைஞரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, படுகாயமடைந்தனர். (ஓ)

# மட்டு. இந்து இளைஞர் மன்றத்தின் செயலகம் ஷெல் வீச்சில் சேதம்!

மட்டக்களப்பு, மே 30

அண்மையில் படையினர் மேற்கொண்ட ஷெல் வீச்சினால், மட்டக்களப்பு ஞானசூரியம் சதுக்கத்தில் உள்ள இந்து இளைஞர் மன்ற செயலகம் சேதமடைந்துள்ளது.

அக்கட்டடத்தின் கூரை சேதமடைந்ததுடன், ஜன்னல் கண்ணாடிகளும் உடைந்து நொருங்கி சிதறிவிட்டன.

ஜெயந்திபுரம், விஜயபுரம் பொலீஸ் காவல் நிலையங்களின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து மட்டக்களப்பில் படையினர் ஷெல்வீச்சு நடத்தியிருந்தது தெரிந்ததே.

இதேவேளை, மட்டக்களப்பு நகரில் படையினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இருதயபுரம், மாமாங்கம், கருவேப்பங்கேணி, போன்ற பிரதேசங்களின் தீவிர பாதுகாப்பின் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

நகரில் சோதனைச் சாவடிகளில் பொலீஸாருடன் இராணுவத்தினரும் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ)

# ரயில் நிலைய அதிபர்கள் நேற்று வேலை நிறுத்தம்

## தெற்கில் பயணிகள் பாதிப்பு

கொழும்பு, மே 30

ரயில் நிலைய அதிபர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் மேற்கொண்டுள்ள வேலை நிறுத்தம் காரணமாக நேற்றுக் காலை ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன! பிரயாணிகளும் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகினர்.

அலுவலகங்களுக்கு செல்வோருக்கான ரயில் சேவைகள் மாத்திரம், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடத்தப்பட்டன. இந்த ரயில்களில் மேலதிகமாக பெட்டிகள் இணைக்கப்பட்டிருந்தன.

கொழும்புக்கு, சுற்றுப்புறத்தில் இருந்து அலுவலகங்களுக்கு வரும் ஊழியர்களுக்கான பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்வதே முக்கியமாக மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

எனினும் பஸ் சேவையே, பிரயாணிகளின் சிரமத்தை ஓரளவாவது தீர்க்க உதவியதாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்கென கூடுதலான பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன், ரயில்வே பொது முகாமையாளர் நேற்றுக் காலை நடத்திய பேச்சுக்களில் எதுவித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படாத நிலையில், வேலை நிறுத்தம் தொடர்கிறது.

இந்த நிலையிலும் சுமார் 60 ரயில்கள் நேற்றைய தினம் கடமையில் ஈடுபட்டன.

ரயில் நிலைய அதிபர்கள், ரயில் நிலைய அலுவலகங்களை மூடிவிட்டதனால் அனுமதிச் சீட்டுக்களை பெற்றுக் கொள்வதில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது.. (ஓ-ச)

# அதிகாரப் பரவலாக்கலை ஐ. தே. க. எதிர்க்காது

## களுத்துறை எம். பி. கூறுகிறார்

இனப்பிரச்சினையைத் தீர்க்க அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படும்போது ஐ. தே. க. அதற்குக் குறுக்கே நிற்கமாட்டாது.

களுத்துறை மாவட்ட ஐ. தே. க. எம். பியான மகிந்த சமரசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

ஹோட்டல் ஒபெறோயில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ''யுத்தமா சமாதானமா?'' என்ற கலந்துரையாடலை அவர் ஆரம்பித்து வைத்தார்.

அதிகாரப் பரவலாக்கல் விஷயத்தில் ஐ. தே. க. தலைமைப்பீடத்தினதும் நாடாளுமன்றக் குழுவினதும் கருத்தையே தாம் பிரதிபலிப்பதாகவும் அவர் கூறினார்.

# விடுதலைப்புலிகள் அன்றி வேறு குழுக்களுடன் சந்திரிகா பேசுவது நேரத்தை வீணடிப்பதாகும்

## அமைச்சர் தொண்டா கருத்து

கொழும்பு, மே 30

வடக்கு - கிழக்குக்கான அதிகாரப் பரவலாக்கல் குறித்து விடுதலைப் புலிகள் அல்லாத தமிழ்க் குழுக்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சு நடத்துவது பயனற்றது. நேரத்தை வீணடிக்கும் செயலாகும்.

— இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் அமைச்சர் எஸ். தொண்டமான்.

அதிகாரப் பரவலாக்கல் அலகு குறித்து ஜனாதிபதி அழைப்பு விடுத்து பேச்சு நடத்திய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுள் அமைச்சர் தொண்டமானும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

''ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய கட்சிகள் இந்தப் பிரச்சினையில் தொடர்புபட்டவை என நான் கருதவில்லை. எனது கருத்துப்படி அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மட்டுமே சம்பந்தப்பட்ட இரு கட்சிகளாகும். இந்தப் பிரச்சினைக்கான தீர்வு இந்த இரு கட்சிகளிடமிருந்துதான் வரமுடியும் — என்றார் தொண்டமான்.

ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்துக்கு மாறாக தொண்டமானின் கருத்து அமைந்திருப்பது குறித்துக் கேட்கப்பட்டபோது—

தாமும் ஜனாதிபதியும் இப்பிரச்சினையை வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்ப்பதாகத் தொண்டமான் பதிலளித்தார்.

''நான் சிறுபான்மைத் தமிழர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்றேன். சிறுபான்மை இனத்தைப் பிரதிபலிப்பதாலேயே அமைச்சரவைக்குள் நான் சேர்க்கப்பட்டிருக்கிறேன்''— என்றார் தொண்டமான்.

பேச்சுக்களில் இருதரப்புகள் பங்குபற்றும் போது பேச்சு முறிவடைந்தால் அதற்கு இருதரப்புமே பொறுப்பேற்க வேண்டும். இரண்டு தரப்புகள் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும்போது விடுதலைப் புலிகள் தரப்பை மட்டும் குறைகூறுவது நியாயமற்றதாகும்''— இவ்வாறு தொண்டமான் மேலும் குறிப்பிட்டார் (உ)

# அரசின் தீர்வு யோசனை; ஐ. தே. கட்சி ஆராயும்

இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கல் ஆகியவை தொடர்பாக அரசாங்கம் தயாரித்துள்ள யோசனைகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஏனையஎதிர்க்கட்சிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழு ஜூன் 5 ஆம் திகதி கூடுகிறது. அப்போது இந்த யோசனைகள் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்படும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பணிப்பின் பேரில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் கடந்த வெள்ளிக்கிழமை ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை நாடாளுமன்றக் கட்டடத்தில் சந்தித்துப் பேசி இருந்தார்.

அச் சந்திப்பின் போதே இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான அரசின் யோசனைகளை விளக்கி இருந்தார்.

இப்படியான சந்திப்பு ஒன்று கடந்த வார முற்பகுதியில் சிறுபான்மை தமிழ் அரசியல் கட்சிகளுடனும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதனை அடுத்தே பிரதான எதிர்க் கட்சியான ஐ. தே. கவை சந்திக்க முடிவு செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை சந்திப்பு இடம்பெற்றது.

இந்த வார இறுதியில் மற்றும் ஒரு தடவை ரணில் விக்கிரமசிங்காவுடனான சந்திப்பு இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# கலாசார மதிப்பீடுகளை வளர்க்கும் வர்ண ஓவியங்களின் கண்காட்சி

> "நேற்று"
> பற்றிய
> ஒரு பார்வை

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஆதரவில், பல்கலைக்கழகப் பொருளியல் மண்டபத்தில், மே 20 இல் இருந்து 22 வரை, ஐந்து ஓவியர்களின் ஓவியங்களின் கண்காட்சி நடைபெற்றது. யாழ்ப்பாணத்து ஓவியர்கள் ஐவரின் சாதனைகள் என்று சொல்லத்தக்க தேர்ந்த படைப்புகள் நேற்று என்னும் பெயரில் காட்சிப்படுத்தப்பட்டன. மூத்த தலைமுறை ஓவியர்களின் ஓவியக் காட்சி என்று அறிவிக்கப்பட்ட இந்தக் கண்காட்சியில், எஸ். ஆர். கனகசபை, அ. இராசையா, க. கனகசபாபதி, மு. கனகசபை, க. இராசரத்தினம் ஆகியோர்களின் வர்ண ஓவியங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த ஓவியர்கள் எல்லோரும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். இவர்கள் அனைவரும் ஆசிரியத் தொழிலில் தாரிகையை நனைத்தவர்கள். ஓரிருவர் தமது உழைப்பால் தடம் அமைத்துக் கொண்டு சித்திர வித்தியாதரிசியாகப் பதவி மாற்றம் அடைந்தவர்கள். ஆனால், எல்லோருமே பகுதிநேர ஓவியர்கள். அதனால்தானோ என்னவோ, ஓவியம் வரைந்து உலகம் பூராகவும் பிரசித்தமானவர்கள் இவர்களில் ஒருவரும் இல்லை.

### எஸ். ஆர். கனகசபை வர்ண ஓவியங்கள்

— கண்காட்சியில் எஸ். ஆர். கனகசபையின் மூன்று ஓவியங்கள் — புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் லோங் அடிகள், ஆறுமுக நாவலர், புதல்வன் — ஆகியன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஆறுமுக நாவலர் ஓவியம் 1952 இல் வரையப்பட்டுள்ளது ஏலவே நிறுவப்பட்ட முகபாவமுள்ள நாவலரின் உருவை மீளவும் தீட்டி பிரதிமை உருவாக்க வடிவம் (Portrait) தந்துள்ளார். லோங் அடிகளைப் பிரதிமை உருவாய் வரைந்திருப்பதில் (1941) அவரது தாரிகையின் வன்மை வெளிப்படுகின்றது. இந்த வரிசையிலிருந்து புதல்வன் (1940) வித்தியாசப்படுகிறது. முடிந்தவரை ஐரோப்பிய பாணியின் அருகில் நின்றே இந்த ஓவியத்தைத் தீட்டியுள்ளார். புதல்வனை ஐரோப்பிய உடையில் மறைத்து வைப்பதிலும் தன் தாராளத்தைக் காட்டியுள்ளார். இதனால் இப்படம் அந்நியமாகிப் போய்விடுகிறது.

### கனகசபை ஓவியங்கள்

சுமார் அறுபத்திரெண்டு ஆண்டுகள் நீடித்து நின்ற கனகசபையின் வாழ்வில், அவரது ஏனைய படங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற நோக்கில் ஓவியக் கண்காட்சியை ஒழுங்கமைத்தவர்கள் செயல்பட வேண்டாமா?

— மு. கனகசபையின் ஓவியங்களான சித்தர்களின் யாத்திரை, மழை, பறை, இடம்பெயர்தல், வீடுதிரும்புதல், வண்டில் சவாரி ஆகியன யாழ்ப்பாண வாழ்க்கையுடன் சேர்ந்ததனால் உயிர் உள்ளனவாக இருக்கின்றன. ''வீடு திரும்புதல்'' [illegible] யாழ்ப்பாணச் சமூகத்தின் கரையோர மக்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கிறது. அதோட்[illegible]துடன் காலத்தின் கோலமாகப் புதுமையும் சேர்ந்து விடுகிறது. கேரளத்து மோஸ்தரில் மீனவப் பெண்கள் சட்டையும் (Blouse) சேலையும் அணிந்திருக்கிறார்கள் ''வீடு திரும்புதல்'' என்ற தலைப்புக்கும் ஓவியத்துக்கும் சம்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்துல் காதரும் அமாவாசையும் தான்.

''மழை'' என்ற ஓவியத்தில் ஆடு, அதன் உரிமையாளர், மழை - இத்தியாதிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. மழையில் நனையும் ஆட்டை இழுக்கும் போது, அது முன்னேறி நடக்க முரண்பிடிப்பது வழக்கம். ஆனால் ஆடு இசைந்து போவது போல் சித்திரிக்கப்பட்டிருப்பதால் ஓவியத்தின் கட்டுக்கோப்புக் குலைந்து விடுகிறது. மற்றும்படி, இந்த ஐவரில் ஓவியர் மு. கனகசபையைத் தவிர வேறெவரின் தூரிகையும் (காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்களில்) சமகாலப் பிரச்சினைகளைத் தொட்டதாக இல்லை)

''இடம்பெயர்தல்'' (1991) என்ற தலைப்பிட்ட ஓவியத்தில், இடம்பெயரும் மக்களின் எல்லா அவயங்களையும் கொண்டு வந்திருக்க முடியாது தான். பிரச்சினை இதுதான் என்று சுட்டிக் காட்டுவதே முழுமையாகி விடுகிறது. கலைத்துறைகள் எதுவாயினும், நிஜத்தைச் சித்திரிக்கும் போதுதான் அது சுயதன்மை உடையதாகிறது. வண்டில் சவாரி, பறை ஆகியன சிறப்பாக வடிவம் பெற்றிருக்கின்றன.

''வண்டில் சவாரி''யில் முற்றவெளி [illegible] யாழ்ப்பாணம் [illegible] யையும், கடற்கரை ஓரமாக அந்தோட்டையில் ஒரு மூலையில் இருந்த தாக்கு மரத்தையும் சித்திரித்துக் காட்டியுள்ளார். இந்த நுட்பத்தைத்தான் ஓவியரின் அவதானம் என்று சொல்ல வேண்டும்.

### கனகசபாபதியின் ஆறு ஓவியங்கள்

— க. கனகசபாபதியின் ஓவியங்களைப் பார்ப்பது இன்னொரு அனுபவம்.

வல்லை, ஆசிரியர் முத்தையா, மன்னார் கடற்கரை, புதல்வன், கோழிச் சண்டை, நிலைப்பொருள் என்று ஆறு ஓவியங்கள் அடங்கியுள்ளன. ''கோழிச் சண்டை''யில் நவீன ஓவியத்தின் ஆரம்பப் புள்ளிகள் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது. நவீன ஓவியத்தின் சேர்க்கையும், கியூபிஸமும் ''புதல்வனில்'' பளிச்சென்று தெரிகின்றன. ''வல்லை'', ''மன்னார்க் கடற்கரை'' இரண்டும் மண்ணுக்கே உரியவற்றின் பிரதிகளாகும். சிறப்பாகக் கையாண்டிருக்கிறார். நிலைப்பொருள் ஓவியம் பொருளை அப்படியே வரையும் படைப்பு உத்தி இது. பழைய படம்.

### இராசையாவின் எட்டுப் படங்கள்

— அ. இராசையா மொத்தமாக எட்டுப் படங்களைக் காட்சிப்படுத்தியுள்ளார். கோயில் வரிசையில் தில்லையம்பர் பிள்ளையார் கோயில், நல்லூர், மிகிந்தலை, கோயில் என்று நான்கு. ஆத்ம ஈடுபாட்டைத் தனது ஓவியங்களில் காட்டும் அ. இராசையா, புறப் பண்புகளோடும் ஒத்திசைவாகப் போவதை மலையகம் (1), மலையகம் (2) மற்றும் கொழும்புத் துறை, இராமேஸ்வரம் என்ற ஓவியங்களில் காணலாம். இராசையாவின் இயற்கைக் காட்சி ஓவியங்களில் [Landscape] மலையும், மேகமும், பூக்களும்' பொய்மையும் அலங்காரமற்ற அர்த்த பாவத்துடன் செழுமையாய் உள்ளன. இயற்கை வர்ணமாகத் தீட்டியிருக்கிறார்.

### இராசரத்தினம் படங்கள்

க. இராசரத்தினம் மனிதர்களால் கவரப்பட்டவர் போல் தெரிகிறது. காட்சிக் கூடத்தில், இவர் காட்சிப் படுத்தியிருந்த படங்கள் இதற்கு நல்ல உதாரணம். ஓவியரின் தந்தை, சுயவுருவப் படம் - 1, சுயவுருவப் படம் (2) (Self Portrait), மாற்கு, வீரசிங்கம், ஒரு ஆங்கிலோ இந்தியர் என்று பல முகங்களை வரைந்திருக்கிறார்.

இராசரத்தினம் வரைந்த ஓவியர் மாற்கின் பிரதிமை பார்வையாளரைப் பிரமிக்க செய்து விட்டது. மாற்கு, கூட்டுறவாளர் வீரசிங்கம் ஆகியோரின் படங்களை மறக்கமுடியாத வண்ணம் வரைந்திருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், அனைத்துப் பிரதிமைகளையும் சிறப்பாக வரைந்திருக்கிறார். மாற்குவின் படம் சராசரிக்கு மேலானது. தேர்ந்தெடுத்த வர்ணம் இவ்வோவியத்தின் சிறப்பம்சம் இதுதான்.

குறிப்பிட்ட சில போக்குகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 29 படங்களுடன் கண்காட்சி முடங்கிவிட்டது. இன்னும் இருபத்தைந்து முப்பது ஓவியங்களைச் சேர்த்திருக்கலாம் என்று பார்வையாளர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

கலாச்சார மதிப்பீடுகளை வளர்ப்பதற்கான பொறுப்புள்ள சில அரச நிர்வாகிகள், தங்கள் பணியிலிருந்து தள்ளிநின்று கொண்டிருக்கும் தருணத்தில், ஓவியங்களைக் காட்சிக்கு வைக்கும் காரியத்தில் உதவிய நுண்கலைத் துறையினருக்கு நிச்சயமாக நன்றி செலுத்தியாக வேண்டும்.

சிராளன்

### புலிகளின் குரல் வானொலியில்

**30 - 05 - 1995**
**செவ்வாய் இரவு**

- ★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள் — தகவற்களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா? ''செங்கண்மாரி நோய்'' பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன் எழுதிய 'தெளிவு பிறக்க வேண்டும்'
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்.

**31 - 05 - 1995**
**புதன் காலை**

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

### தமிழீழ வானொலியில்

**செவ்வாய் மாலை**

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம் — 22
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வஜன வாக்கெடுப்பை கோருவோர் அரசியல் தீர்வை விரும்பாதவர்கள்!

## தொண்டமான் பேட்டி

கொழும்பு, மே 30

"இனப்பிரச்சினை பற்றிய என்னுடைய ஈடுபாடு தெட்டத் தெளிவானது; வடக்கு—கிழக்கு மக்களின் உரிமைகளுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கத்துக்கு தக்க இடம் வழங்கவேண்டும். வடக்கு—கிழக்கு இணைப்புப்பற்றி சர்வஜன வாக்கெடுப்பு இருக்கக் கூடாது."

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் "சண்டே லீடர்" இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இவ்வாறு கூறினார்.

யுத்தத்தை நீடிக்க விரும்புவோர் சாக்குப் போக்குகளைக் கண்டு பிடிக்கிறார்கள். இணைப்புக்கு சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும் என்று கூறுவோர் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வை நிச்சயமாக விரும்பவில்லை எனவும் அமைச்சர் தொண்டமான் கூறினார்.

இந்தியாவில் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்திய விடுதலை வீரர் பகத்சிங்குடன் ஒப்பிட்டுப் பேசியது பற்றிக் குறிப்பிடுகையில் அமைச்சர் தொண்டமான் கூறியதாவது:

இந்தியாவில் நான் அதைக் கூறினேன். அங்கு சில பிரச்சினை எழுப்பப்பட்டன. எனது நேர்மையான கருத்தை நான் கூறினேன். இதைப் போய்ப் பயன்படுத்தக்கூடாது; பிரபாகரனைப் பல அட்டூழியங்கள் புரிந்தவர் என்று குற்றம்சாட்டுகின்றார்கள்.

ஆனால் அடுத்தடுத்த அரசாங்கங்கள் அவருடன் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகின்றன. இதன் அர்த்தம் யாது?

ஒரு புறத்தில், அவர் கொலைகாரன் என்று பட்டம் சூட்டப்படுகிறார். மறு புறத்தில், ஸ்ரீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அவர் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியசக்தி ஆவார்.—என்றார். (ஒ-க)

தமிழ் மாணவரின் உரிமைகளை மீறும் வகையில்

# பேராதனை பல்கலை. விடுதிக்குள் தேடுதல் நடத்தியதற்கு கண்டனம்

## மாணவர் சங்கம் அறிக்கை

கண்டி, மே 30

பேராதனை பல்கலைக்கழக மாணவர் விடுதிக்குள் பிரவேசித்து பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்தியதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மகா மாணவர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் ரஞ்சித் ருபசிங்க வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

சம்பிரதாயத்துக்கும் சட்டத்துக்கும் முரணான வகையில் படையினர் திடீரென முன் அறிவித்தல் எதுவும் இன்றி பேராதனை பல்கலைக்கழக விடுதிக்குள் புகுந்து சோதனை நடத்தியுள்ளனர். மாணவர்களின் அறைகளையும் அவர்கள் சோதனையிட்டுள்ளனர். மேலும் அவர்கள் தனிப்பட்ட விடயங்களையும் சேகரித்துள்ளனர் இது முறையற்ற செயல்.

தமிழ் மாணவர்களின் ஜனநாயக உரிமைகளை மீறும் வகையில் உபவேந்தருக்கு அறிவிக்காது — அவரது அனுமதி இல்லாமல் — திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னரும் இவ்வாறு நடந்துள்ளது.

தேசிய பாதுகாப்பு எனக் கூறிக்கொண்டு மேற்கொள்ளப்படும் இவ்வாறான நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பல்கலைக்கழக அதிகாரிகளும் அரசும் தமிழ் சிங்கள அனைத்து மாணவர்களது ஜனநாயக சுதந்திர உரிமைகளை உறுதிப்படுத்துவதை பொறுப்புடன் கவனத்திற் கொள்ள வேண்டும் — என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ)

# பிரபா விவகாரம் மீண்டும் லோகசபையில்

சென்னை, மே 30

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா கூறியிருக்கிறார்.

1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தடாசட்டத்தின் கீழ் பிரபாகரனுக்கு எதிரான கைது வாரண்டை ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை செய்து வரும் தனிநீதிமன்றம் பிறப்பித்ததை அமைச்சர் நேற்று மக்களவையில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையில் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இருந்து பிரபாகரனை இந்தியாவுக்கு கொண்டுவரும் நடவடிக்கையின் அனைத்து அம்சங்கள் குறித்தும் மத்திய அரசின் சம்பந்தப்பட்ட அமைப்புக்களுடன் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

ராஜீவ் படுகொலைக்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று இலங்கை ஜனாதிபதி இந்தியப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்ததை அரசு அறியும் என்றும்—

இலங்கை அரசுத் தலைவர் ஒருவர் இவ்வாறு கூறியதாக வெளிவந்திருப்பது இதுவே முதல் தடவை என்றும்— அமைச்சர் மேலும் கூறினார். (இ-3)

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து நடராசா

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சரவணமுத்து நடராசா நேற்று (29-5-95) காலமானார்.

இவர் காலஞ்சென்ற விவேகம்மாவின் (இராசாத்தி) அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஓவசியர் சபாரட்ணம், சோமசுந்தரம், தம்பிராசா மற்றும் பனோன்மணி ஆகியோரின் சகோதரரும், இராஜராஜேஸ்வரி (இந்திரா), ஸ்ரீஸ்கந்தராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோபாலசண்முகம் (குயின்காமன்ஸ்), பதமா (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும், சுபோதினி திலேசன், நிதர்சன், அனேஜ, அனிறறா, அஞ்சலினா [மூவரும் பிரான்ஸ்] ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-05-95) அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப 3.00 மணிக்கு சோம்பல் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோபால சண்முகம்
(மருமகன்)

162 பாலாவோட்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[36859]

### கதிர்த்தம்பி மனோகரன்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த கதிர்த்தம்பி மனோகரன் [28-5-95] ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வே. கதிர்த்தம்பி (முன்னாள் வின்சர் தியேட்டர் முகாமையாளர்) திருமதி க. தங்கம்மா ஆகியோரின் கனிஷ்ட புதல்வனும், திருமதி ம. சுதாஞ்சனாவின் அன்புக் கணவரும், சகானாவின் அன்புத் தந்தையும், திரு ஆ. சண்முகம் 'எழுதுவினைஞர் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்', திருமதி ச. பகவதி ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி ச. சரஸ்வதி, திருமதி பா. பத்மாவதி, திரு க. பாலச்சந்திரன், திருமதி சி. லீலாவதி, திரு க. நித்தியானந்தன், திருமதி நிலாவதி, திருமதி க. கலாவதி, திரு க. சிவநாதன், திருமதி அ. கருணாவதி, திரு க. சற்குணானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ச. நந்தகுமார், ச. நந்தருபன், ச. நந்ததேவன், ச. நந்தகுமாரன், ச. நிரஞ்சனா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
திரு சு. பாலசிங்கம்
திரு சு. தியாகராசா
[மைத்துனர்கள்]

[36861]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 30-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

திருமலை லிங்கநகரில் இருந்து

# 44 தமிழ் குடும்பங்களை வெளியேற்ற வேண்டாம்!

## வட-கிழக்கு ஆளுநரும் கோரிக்கை

கொழும்பு, மே 30

திருமலை லிங்கநகரில் இருந்து 44 தமிழ் குடும்பங்களை வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறு வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலீஸ் மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோரை கேட்டுள்ளார்.

திருமலை "பிளாண்ட் பொயின்ற்" இராணுவமுகாமுக்கு அருகில் உள்ள லிங்கநகரில் 44 தமிழ் குடும்பங்கள் 1980 ஆம் ஆண்டு முதல் அரசினால் சட்டரீதியாக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களுடன் வாழ்ந்து வருகின்றன.

லிங்கநகர் கிராமம் "பிளாண்ட் பொயின்ற்" இராணுவ முகாமின் பயிற்சிக்களத்தில் உள்ளது என்று உரிமை கோரி அங்கிருந்து 44 தமிழ் குடும்பங்களும் உடனடியாக வெளியேற வேண்டும் என பாதுகாப்பு படையினர் அண்மையில் உத்தரவு பிறப்பித்திருந்தனர். (ஐ)

### குடாநாட்டை---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களின் மேலார்ந்த அதிகாரியாக அப்போது பணிபுரிந்த மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரத்ன, அதிரடிப் படைப் பிரிவு இரண்டின் பொதுக்கட்டளைத் தளபதியாக அப்போது பணியாற்றிய மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க, இயக்குநர் பிரிகேடியர் தெவிந்த கலுப்பஹன உட்பட பல இராணுவ உயரதிகாரிகள் கூட்டத்தில் பங்குபற்றினர்.

குடாநாட்டைப் பிடிக்க காலக்கெடு

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்து, அங்கு புலிகளை அடக்க வேண்டும் என அக்கூட்டத்தில் வலியுறுத்திய அமைச்சர் ரத்வத்தை, அதற்கு குறுகிய காலக்கெடு ஒன்றையும் விதித்து, அந்த நடவடிக்கையை ஆரம்பித்து அக்காலக்கெடுவுக்குள் வெற்றிகரமாகச் செயற்படுத்த இராணுவ அதிகாரிகள் தயாரா என்றும் நேரடியாக கேள்வி எழுப்பினார்.

ரத்வத்தையின் உத்தேச திட்டத்தையும் முயற்சியையும் குறித்து அலுவலக நிலை உயரதிகாரிகள் மௌனம் சாதித்த போதிலும், களத்தில் படைகளை நடத்தும் அதிகாரிகள் அதனைக் கடுமையாக எதிர்த்து நேரடியாகக் கருத்து வெளியிட்டனர்.

அமைச்சரின் கேள்விக்கு நேரடியாக "முடியாது" எனப் பதிலளித்த கூட்டுப் படை நடவடிக்கைகளின் அப்போதைய மேலார்ந்த தளபதியான மேஜர் ஜெனரல் ஏ. எம். யூ. செனிவிரத்ன ஒரு குறுகிய காலத்தில் அத்தகைய நடவடிக்கைகளை ஏன் பூர்த்தி செய்ய முடியாது என்பதற்கான காரணங்களையும் விளக்கினார்.

ஏனைய பல அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பாக மௌனம் சாதித்த போதிலும் மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்க மட்டும் மேஜர் ஜெனரல் ஏ.எம்.யூ. செனிவிரத்னவின் கருத்தை வலியுறுத்தினார்.

மற்றொரு பொஸ்னியாவாகும்

கடல்வழியாக குடாநாட்டின் மீது தரையிறங்கி தாக்குதல் நடத்துவது மற்றொரு "பொஸ்னியா" போன்ற யுத்த நிலையை ஏற்படுத்தும் என்றும் —

காடுகளில் காவலரண்களில் இருந்து காவலரண்களுக்கு மோதும் நிலை மாறி, நகரங்களில் கட்டடங்களில் இருந்து கட்டடங்களுக்கு மோதும் நிலைஏற்படும் என்றும்—

அங்கு சுட்டிக்காட்டப்பட்டதாம்.

இவ்வாறு தமது திட்டத்துக்கு எதிராக— நேரடியாக இராணுவ உயரதிகாரிகள் கருத்துக் கூறியதால் கடும் சீற்றமடைந்த அமைச்சர் ரத்வத்தை தமக்கு எதிராகக் கருத்து வெளியிட்ட அதிகாரிகளை முக்கிய பொறுப்புகளில் இருந்து அடுத்த நாளே விடுவித்தார்; இராணுவ உயர் கட்டளைப் பீட அமைப்பு முற்றாக மாற்றியமைக்கப்பட்டது.

மேஜர் ஜெனரல் ஏ.எம்.யூ. செனிவிரத்ன தமது முன்னைய பொறுப்பிலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட்டார். அவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் ரோஹான் தலுவத்த நியமிக்கப்பட்டார்.

முக்கியமற்ற இராணுவத் தொண்டர் படைத் தளபதி பதவிக்கு செனிவிரத்ன இடம் மாற்றப்பட்டார்.

மேஜர் ஜெனரல் கெமுனு குலதுங்கவும் முக்கிய பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவரது இடத்திற்கு மேஜர் ஜெனரல் ஜலிய நணயக்கார நியமிக்கப்பட்டார்.

இவ்வாறான திடீர் உத்தரவுகளும் பதவி நிலை மாற்றங்களும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் மத்தியில் நம்பிக்கையீனத்தையும் உறசாகமின்மையையும் ஏற்படுத்தி உள்ளன [illegible] வட்டாரச் [illegible]. (உ-3)

### அனுரா---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவில்லை எனவும்—

தற்போது அனுரா அமைதியைப் பேணுவது அவர் சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணைய விருப்பம் கொண்டுள்ளார் என்பதையே எடுத்துக் காட்டுகிறது எனவும்—

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

### தேர்தலில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் 16 ஆம் திகதி பொதுத் தேர்தலுக்கு முன்னர் வடக்கு கிழக்கு, தென் மாகாணங்களில் இந்த அதிகாரிகளுக்கு விசேட நியமனங்கள் வழங்கப்பட்டன.

இத்தகைய நியமனம் பெற்ற மேஜர் ஜெனரல் ஒருவர், பிரிகேடியர் ஒருவர், மற்றும் சிரேஷ்ட பிரதி பொலீஸ் மா அதிபர் ஒருவர், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் ஆகியோர் இது தொடர்பாக இரகசிய பொலீஸ் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தேர்தல் விதிகளுக்கு முரணாக செயற்பட்டார்களா? தேர்தல் நடைமுறைகளில் தலையிட்டனரா? முன்னாள் ஜனாதிபதியால் வழங்கப்பட்ட விசேட உத்தரவுகளை ஏற்று இவர்கள் செயற்பட்டனரா? — என்ற விவகாரங்கள் குறித்து சி. ஐ. டியினர் விசாரணை செய்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இந்த விடயம் குறித்து முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்காவை விசாரணை செய்ய தங்களுக்கு அதிகாரமில்லை என சி. ஐ. டியினர் குறிப்பிட்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வடபகுதிப் பிரதேசங்களிலும் பொதுத் தேர்தலை நடத்தும்படி சில சிரேஷ்ட அதிகாரிகள் அரசுக்கு ஆலோசனை கூறியது விசாரணைகளின் போது தெரியவந்திருப்பதாகவும் —

நீதியும் சுதந்திரமுமான தேர்தல்களை அங்கு நடத்த முடியாது என்பதால் அந்த யோசனையை தேர்தல் ஆணையாளர் நிராகரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் இந்த விடயம் குறித்து தகவல் வெளியிட்ட 'ராவய' பத்திரிகை —

மேஜர் ஜெனரல் லக்கி அல்கம, பிரிகேடியர் சரத் பொன்சேகா, சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் மெரில் குணவர்த்தன, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் கே. பி. ஜி. பத்திரண ஆகியோர் முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தின் போது ஒழுங்கற்ற முறையில் பதவி உயர்வுகளைப் பெற்றுள்ளனர் என இரகசியப் பொலீஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரிய வந்திருப்பதாகவும் —

இது பற்றிய அறிக்கையை பிரதிப் பொலீஸ் மா அதிபர் சுமணசேகர பொலீஸ்மா அதிபருக்கு சமர்ப்பித்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளது.

1994 தேர்தலின் போது வடக்கிலும் கிழக்கிலும் தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதாக சிபாரிசு செய்து அன்றைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க மற்றும் அவரது அரசைத் திருப்திப்படுத்தி அதன் மூலம் பதவி உயர்வுகளைப் பெற இவர்கள் முயற்சித்தனர் என்பது விசாரணைகளிலிருந்து உறுதியாகிறது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக "ராவய" பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-10]

### வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

யாழ்ப்பாணம், மே 30

கடந்த 26 ஆம் திகதி மன்னாரில் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த வித்தகியின் திருவுருவப்படம் இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது சங்கானை இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு செட்டிவடி சனசமூக நிலையத்தில் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்படும்.

அங்கிருந்து 2 30 மணியளவில் திருஉருவப்படம் வீரவேங்கை இளங்குமரனின் கொக்குவில் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் வைக்கப்படும்.

இராணுவ மரியாதையுடன் திருவுருவப்படமும், இளங்குமரனின் வித்துடலும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்படும். வீரவேங்கை இளங்குமரன் நேற்று சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் தமிழீகமெய்தினார். [இ-3]

### கல்வி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருட்டே இக்கொடி வாரம் நடத்தப்படுகிறது.

சகல தரப்பினரையும் கொடிகளை வாங்கி நிதித்துக்கு உதவுமாறு தமிழீழக் கல்விக் மேம்பாட்டுப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

### இராணுவ---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கும் இடையில் நடந்து வரும் ஆயுதப் போரில் ஒரே மாதத்தில் இருதரப்பிலும் 500 க்கும் அதிகமானவர்கள் இறந்திருப்பதற்கு அமெரிக்கா தனது [illegible] தாபத்தையும் [illegible] ளதாகத் தெ[illegible]. (இ-3)

# மனிதமூளை - கம்பியூட்டர் இணைப்பில் வெற்றிகிட்டும்

## விஞ்ஞானிகள் நம்பிக்கை

இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில் மனித மூளையை நேரடியாக கம்பியூட்டருடன் இணைப்பது சாத்தியமாகும் என விஞ்ஞானிகள் தெரிவித்ததாக செய்தி ஏஜென்சி ஒன்று அறிவித்துள்ளது.

சிலிக்கன் துண்டொன்றில் நரம்புக் கலங்களை வளர்ப்பதன் மூலம் 2020 ஆண்டளவில் மூளையுடனான நேரடித் தொடர்புகளை ஏற்படுத்த முடியும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித மூளையின் காபன் தளத்தைக் கொண்டிருக்கும் நினைவாற்றல் பகுதியுடன், கம்பியூட்டர் பகுதியின் சிலிக்கன் நினைவாற்றல் பிரிவை நேரடியாக தொடர்பு படுத்தும் தொழில் நுட்பமாக இது விளங்கும்.

இது சாத்தியமானால் பிரித்தானிய கலைக்களஞ்சியம் முழுவதையும் ஒரு சிறிய துண்டில் அடக்கி தமது தலைக்குள் வைத்துக்கொண்டு ஒருவர் செல்லக்கூடிய நிலையும் ஏற்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

# மண்எண்ணெய் குறைந்த அளவே கப்பலில் வருகிறது

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 12 ஆயிரம் "பரல்" மண்எண்ணெய் கொண்டு வருவதற்கு பாதுகாப்பு இணைப்புக் குழு அனுமதி அளித்த போதிலும் —

இன்று பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் "மாஹேறா" கப்பலில் 4,500 'பரல்கள்' மட்டுமே எடுத்துவரப்படுகின்றன

கடந்த வாரம் இக்கப்பல் புறப்பட ஆயத்தமானபோது 5,000 பரல்களை மட்டுமே ஏற்றிச் செல்ல அனுமதிக்க முடியும் என்று கடற்படை தெரிவித்தது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருடன் யாழ் செயலக அதிகாரிகள் தொடர்பு கொண்டும் பயன்கிடைக்கவில்லை.

ஆனால் கப்பல் 4,500 பரல்களுடன் புறப்பட்ட பின்னர், மேலும் 4,500 பரல்களை ஏற்றிச் செல்லலாம் என்று அனுமதி வழங்கப்பட்டது

கொழும்பு அதிகாரிகளின் கெடுபிடிகளால் மூன்றில் ஒரு பகுதியே இங்கு வந்துசேர உள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் பல நாள்கள் கப்பல் காத்து நின்றதால் கப்பல் கட்டணம் அதிகமாகச் செலுத்த நேரிடும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. [அ-3]

# சமூக அபிவிருத்திக்கு கூட்டுறவுதுறை உதவும்

## ஆணையாளர் டிவகலாலா உரை

வலிகெந்த, மே 30

சமூக அபிவிருத்திக்கு கைகொடுத்து உதவக் கூடிய துறை கூட்டுறவுத்துறை. உலகளாவிய ரீதியில் கூட்டுறவுத்துறை வளர்ச்சி பெற்றுள்ளது அதன் வளர்ச்சிக்கேற்ப எமது நாட்டிலும் நாங்கள் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுத்துறை சார்ந்த தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு ஊழியர்கள் பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த காலங்களில் கூட்டுறவுத்துறையின் துரித வளர்ச்சியில் வடபகுதியே முன்னணியில் திகழ்ந்தது இன்று வடபகுதியில் மட்டுமல்ல; கிழக்கு மாகாணத்திலும் கூட்டுறவுத்துறை சிறந்த வளர்ச்சி பெற்று வருகிறது.

எமது தேவைகள் எவை என்பதனை நாம் இனம் கண்டு அவற்றை கூட்டுறவுத் துறை மூலம் நிறைவு செய்து கொள்ள வேண்டும். எமது தேவைகள் பற்றிய சரியான தரவுகள் சேகரிக்கப்பட்டு அதை நிறைவு செய்வதற்கு வேண்டிய ஒழுங்கான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

கூட்டுறவுத் துறையின்வளர்ச்சிக்கு அதன் தேவைகள் எவை என உணரப்பட்டு இனம் காணப்படவேண்டும்.

கூட்டுறவுத் தந்தையான அமரர் வீரசிங்கம் போன்ற சிறந்த கூட்டுறவாளர்கள் நம் மத்தியில் உருவாக வேண்டும் —

என்று திரு சு. டிவகலாலா தமது உரையில் குறிப்பிட்டார். (க-152)

### பின்னடைவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாகாணத்துக்கா? முக்கியத்துவம் கொடுப்பது எனத் தீர்மானிக்க முடியாது தடுமாறுகிறது.

ஆனால் விடுதலைப்புலிகள் தமது இராணுவ உபாயங்களில் தெளிவாகவே உள்ளார்கள்

கேந்திர முக்கியத்துவம் இழப்பு

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையில் அரசாங்கத்தின் தோல்வியை அடுத்து பூநகரி, ஆனையிறவு, வெற்றிலைக்கேணி இராணுவ நிலைகள் தமது கேந்திர முக்கியத்துவத்தை இழந்துள்ளன.

விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட தவளைத் தாக்குதலின்பின் பூநகரியை காப்பாற்றி வைத்திருப்பது தொடர்பாக அரசாங்கத்துக்கு கேள்வி எழுந்துள்ளது.

மூலோபாயங்கள் அற்ற நிலை அரசாங்கத்துக்கு இராணுவ தோல்விகளையும், உயிராபத்துக்களையும் ஏற்படுத்தியுள்ளது என்பது வரலாறு தரும் பாடமாகும்.

ஆனால் வெற்றிகள் பற்றிய வெறும் வாக்குறுதிகள் மட்டும் அரசால் உறுதியாக தெரிவிக்கப்படுவதே வழக்கம்.

ஸ்ரீலங்கா அரசு வடக்கிலும், கிழக்கிலும் இராணுவ உபாயங்களை வகுத்துக் கொள்ள முடியாதபடி அதனது இராணுவக் கொள்கையை மழுங்கடிக்கச் செய்ததில் விடுதலைப் புலிகள் உற்சாகமாகவும், நம்பிக்கையுடனும் செயற்பட்டார்கள். ஸ்ரீலங்கா அரசை பொறுத்தவரையில் மாற்றுத் திட்டம் ஒன்றை ஏற்படுத்துவதுகூட பெரும் ஆபத்தான விடயமாகவே உள்ளது

இப்படி தராகி தெரிவித்துள்ளார்.

பல வெளிநாடுகளில் இடம்பெற்ற இராணுவ போர்முறை உபாயங்களை சுட்டிக்காட்டியுள்ள அவர் 20 ஆயிரம் பிரெஞ்சுத் துருப்புக்கள் வியட்னாம் யுத்தத்தில் கொல்லப்பட்டது போல வட தமிழீழத்தில் உள்ள சிங்கள இராணுவமும் ஓர் நிகழ்வை சந்திக்க போகிறது

2 ஆம் கட்ட ஈழப் போர் தொடங்கிய போதே இப்போரானது இராணுவ மூல உபாயத்தை இழந்தவர்களுக்கும், தெளிவான இராணுவ மூல உபாயங்கள் உள்ளவர்களுக்குமான போராக உள்ளது.

இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

### யாழ்.---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து ஆஸ்பத்திரி மின் விநியோகம் ஸ்தம்பிதம் அடையாமல் தவிர்ப்பதற்காக வேறு வழிகளில் டீசலைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். (அ-4-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org